மூன்றாவது

# விலங்கின் பெயர்த்தொகுதி

## 411. சிங்கத்தின் பெயர்

ஆளி, மடங்கல், அரி, கண் டீரவம்,
கேசரி, மிருகா பதி, வயப் போத்து,
சீயம், வயப்புலி, பஞ்சானனம், வயமா,
(மேவிய) சிங்கம் என விளம் பினரே.

**சிங்கத்தின் பெயர் (11)**

1. ஆளி, 2. மடங்கல், 3. அரி, 4. கண்டீரவம், 5. கேசரி, 6. மிருகாபதி, 7. வயப்போத்து, 8. சீயம், 9. வயப்புலி, 10. பஞ்சானனம், 11. வயமா.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 யாளி
2:2 மிருகபதி, 4. சீயம்
3:3 பஞ்சானனமே
3:4 வயப்புலி பஞ்சா னனமே வயமா
வியப்புறு சிங்க மென விளம் பினரே. (1)

## 412. புலியின் பெயர்

கொடுவரி, உழுவை, குயவரி, வேங்கை,
வல்லியம், வயமா, சார்த்தூலம், வியாக்கிரம்,
புல்லு, புண்டரீகம், வயவரி, என்று இவை
பல்பொறிப் புலியின் பெயர் எனப் பகர்வர்.

**புலியின் பெயர் (11)**

1. கொடுவரி, 2. உழுவை, 3. குயவரி, 4. வேங்கை, 5. வல்லியம், 6. வயமா, 7. சார்த்தூலம், 8. வியாக்கிரம், 9. புல்லு, 10. புண்டரீகம், 11. வயவரி.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3 சாத்தூலம்
3:1-2 புல்புண்டரீகம் (2)

### 413. யானையாளியின் பெயர்

அறுகு, புழைக்கை, யாளி எனவே
பெறுமே யானை யாளிப் பெயரே.

**யானையாளியின் பெயர் (3)**

1. அறுகு, 2. புழைக்கை, 3. யாளி.

தலைப்பு : ஆனையாளியின் பெயர், யாளிப் பெயர்.
1:1 அறுகே 2. பூழ்க்கை; பூட்கை-அச்சுப்பிரதி. (3)

### 414. யானையின் பெயர்

தும்பி, கடிவை, புகர்முகம், தோல், கரி,
உம்பல், வயமா, பகடு, நால்வாய்,
கரிணி, குஞ்சரம், கயமே, களபம்,
மருண்மா, தந்தி, மாதங்கம், ஒருத்தல்,
களிறு, சிந்துரம், கறையடி, எறும்பி,
வழுவை, வாரணம், வேழம், வல்விலங்கு,
நாகம், மதகயம், அத்தி, இபம், கும்பி,
போதகம், உவாவே, தூங்கல், மாதிரம்,
(மறம்மலி) கைம்மா, ஆம்பல், கோட்டுமா,
பிறவும் புழைக்கையோடு யானைப் பெயரே.

**யானையின் பெயர் (38)**

1. தும்பி, 2. கடிவை, 3. புகர் முகம், 4. தோல், 5. கரி, 6. உம்பல், 7. வயமா, 8. பகடு, 9. நால்வாய், 10. கரிணி, 11. குஞ்சரம், 12. கயம், 13. களபம், 14. மருண்மா, 15. தந்தி, 16. மாதங்கம், 17. ஒருத்தல், 18. களிறு, 19. சிந்துரம், 20. கறையடி, 21. எறும்பி, 22. வழுவை, 23. வாரணம், 24. வேழம், 25. வல்விலங்கு, 26. நாகம், 27. மதகயம், 28. அத்தி, 29. இபம், 30. கும்பி, 31. போதகம், 32. உவா, 33. தூங்கல், 34. மாதிரம், 35. கைம்மா, 36. ஆம்பல், 37. கோட்டுமா, 38. புழைக்கை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆனையின் பெயர்.
1:2 கடுவை, கடவை 3:1 கருணி
5:2 சிந்தூரம் 6:3-4 வல்விலங்கு வேழம்
7:2 மதங்கயம், மதக்கயம் 8:2-3 உவாதூங்கல் குடம்பி
9:1 மறமற 10:2 பூழ்க்கையொடு. (4)



### 415. களிற்றியானையின் பெயர்

மதகரி, தந்தி, (வன்) களிற் றியானை

**களிற்றியானையின் பெயர் (2)**

1. மதகரி, 2. தந்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : களிற்றானையின் பெயர்
3-4 வன்களிற் றா னை (5)

### 416. பிடியானையின் பெயர்

கரேணு என்பது பிடியானைப் பெயரே.

**பிடியானையின் பெயர் (1)**

1. கரேணு.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 கரேணுக மென்பது, கரிணிகை யென்பது,
கரிணி யென்பது
3 பிடியின்
கரேணு பிடி பெண்யானைப் பெயரே-அச்சுப்பிரதி (6)

### 417. யானைக்கன்றின் பெயர்

போதகம், துடியடி, கயமுனி, கன்று ஆம்

**யானைக்கன்றின் பெயர் (3)**

1. போதகம், 2. துடியடி, 3. கயமுனி. (7)

### 418. யானைபிறந்த நிலப் பெயர்

கிரிசரம், வனசரம், நதிசரம் அடுத்துப்
பெறுமே யானை பிறந்தநிலப் பெயரே

**யானை பிறந்தநிலப் பெயர் (3)**

1. கிரிசரம், 2. வனசரம், 3. நதிசரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆனை பிறந்த நிலத்தின் பெயர்,
2:3 நதிசரம் வனசரம்.

பிறந்த நிலப்பெயரை அடுத்து யானை பெறும் பெயர் என்பது பொருளாகும். (8)

## 419. குதிரையின் பெயர்

துரகதம், துரங்கம், வாசி, பாய்மா,
குரகதம், கிள்ளை, கந்துகம், கற்கி,
மண்டிலம், துரகம், மாவே, இவுளி,
(ஒண்திறல்) உன்னி, உத்தரி, கோணம்,
குந்தம், கொய்யுளை, கொக்கு, மா; பரி,
அச்சுவம், அயமே, புரவி, அரியொடு
(இத்திறம்) அத்திரி குதிரையின் இயற்பெயர்.

**குதிரையின் பெயர் (25)**

1. துரகதம், 2. துரங்கம், 3. வாசி, 4. பாய்மா, 5. குரகதம், 6. கிள்ளை, 7. கந்துகம், 8 கற்கி, 9. மண்டிலம், 10. துரகம், 11. மா, 12. இவுளி, 13 உன்னி, 14. உத்தரி, 15. கோணம், 16. குந்தம், 17. கொய்யுளை, 18. கொக்கு, 19. மா, 20. பரி, 21. அச்சுவம், 22 அயம், 23. புரவி, 24. அரி, 25. அத்திரி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 துரசி 2:3 கந்துருவம், கோடை 3:3 வாசி
5:3-4 கொக்குப் பரியயம் 6:2 வயமா,
6. அச்சுவ மரிபுரவி பத்தகி யோடு
சூடாமணி நிகண்டு பத்திரி என ஒரு பெயர் தரும்.
இதன் மேலும், 'கோடகஞ் சடலஞ் சயிந்தவங் கந்திருவம்
ஆடல் வயமாவு மவற்றின் பால' என இரண்டு அடிகள் சில பிரதிகளில் அதிகமாய் உள்ளன. இவற்றோடு,
'கனவட்டம் பாடலங் கோரங் கந்துகம்
எனவும் பண்படுத் தெண்ணவும் படுமே'
என மேலும் இரண்டு அடிகளையும் குதிரையின் பெயர்ச் சூத்திரத்துடன் இயையக் கொள்வர். (9)

## 420. நால்வேந்தர் குதிரையின் பெயர்

கனவட்டம், பாடலம், கோரம், கந்துகம்,
எனவும் பண்படுத்து எண்ணவும் படுமே.

**நால்வேந்தர் குதிரையின் பெயர் (4)**

1. கனவட்டம், 2. பாடலம், 3. கோரம், 4. கந்துகம்,

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 சயிந்தவம் கந்தருவம் (10)

## 421. பாண்டியன் குதிரையின் பெயர்

கனவட்டம் என்பது வழுதி ஊர்மா



**பாண்டியன் குதிரையின் பெயர் (1)**

1. கனவட்டம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கனவட்ட மென்னும் பெயர்
அவற்றுள் கனவட்ட மென்பது-அச்சுப்பிரதி (11)

## 422 சேரன் குதிரையின் பெயர்

பாடலம் என்பது சேரன் ஊர்மா

**சேரன் குதிரையின் பெயர் (1)**

1. பாடலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பாடல மென்னும் பெயர். (12)

## 423. சோழன் குதிரையின் பெயர்

கோரம் என்பது சோழன் ஊர்மா

**சோழன் குதிரையின் பெயர் (1)**

1. கோரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கோரமென்னும் பெயர் (13)

## 424. குறுநில மன்னர் குதிரையின் பெயர்

கந்துகம் குறுநில மன்னர் ஊர்மா

**குறுநில மன்னர் குதிரையின் பெயர் (1)**

1. கந்துகம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கந்துகமென்னும் பெயர்
3. மன்னன் (14)

## 425. குதிரைக்குளம்பின் பெயர்

குரமே அவற்றின் குளம்பு ஆகும்மே.

**குதிரைக்குளம்பின் பெயர் (1)**

1. குரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 குளம்பு மாகும். (15)

## 426. குதிரை செல்வழியின் பெயர்

மாதிகம் அவற்றின் மார்க்கம் ஆகும்.

**குதிரைசெல் வழியின் பெயர் (1)**

1. மாதிகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: குதிரை மார்க்கத்தின் பெயர், குதிரை வீதியின் பெயர், மாதிகம் என்னும் பெயர். மாதி கவனம் அவற்றின் மார்க்கம் 'கவன மவற்றின் கயக்க மாகும்' என்று சில பிரதியில் மிகுதியாகக் காணப்படுகின்றது. (16)

## 427. பசுவின் பொதுப்பெயர்

ஆவும், பெற்றமும், பசுவும், ஆனும்,
கோவும், குடஞ்சுட்டும், சாதிப் பொதுப் பெயர்

**பசுவின் பொதுப்பெயர் (6)**

1. ஆ, 2. பெற்றம், 3. பசு, 4. ஆன், 5. கோ, 6. குடஞ்சுட்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பசுச்சாதியின் பெயர், பசுவின் சாதிப் பெயர்.
1:1 ஆவினம்
2. 'கோவுந் தேனுவுங் குடஞ்சுட்டும்' பொதுப்பெயர் (17)

## 428. பசுவின் பெண்பாற்பெயர்

சுரபி, தேனு, சுரை, கபிலை, சேதா,
குரமே, கோமளம், பெண்பால் மேற்றே

**பசுவின் பெண்பாற்பெயர் (7)**

1. சுரபி, 2. தேனு, 3. சுரை, 4. கபிலை, 5. சேதா, 6. குரம், 7. கோமளம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பெண்பசுவின் பெயர், பசுவின் பெயர்.

தெய்வப் பசுவின் பெயர்:

சுரபி, தேனு சுரர்கபிலை சேதா

பசுவின் பெண்பாற் பெயர்:

குரமே கோமளம் பெண்பான் மேற்றே என்று சில பிரதிகள்
2:2 கோம்மை 4. மேன. (18)



## 429. பசுவின் ஆண்பாலின் பெயர்

பாறல், புல்லம், பாண்டில், பசு, மூரி,
ஏறு, பூணி, இறாலே, பெற்றம்,
எருது, சே, விடை, இடபம், என்றுஇவை
கருதின் போத்தின் பெயர் ஆகும்மே.

**பசுவின் ஆண்பாலின் பெயர் (13)**

1. பாறல், 2. புல்லம், 3. பாண்டில், 4. பசு, 5. மூரி, 6. ஏறு, 7. பூணி, 8. இறால், 9. பெற்றம், 10. எருது, 11. சே, 12. விடை, 13. இடபம்,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: எருதின் பெயர், ஏற்றின் பெயர்
1. பாறல் மூரி பாண்டில் புல்லம்
4:2-4 பெயரெனக் சுழறுவர், பெயரெனக் கருதுவர் 'நரையென் கிளவி யெண்ணலு முரித்தே' என ஓர் அடி சில பிரதிகளில் மிகையாகக் காணப்படுகிறது. (19)

## 430. எருமைச் சாதியின் பெயர்

எருமைச் சாதி இருபாற்கும் உரித்தே

**எருமைச் சாதியின் பெயர் (1)**

1. எருமை என்னும் பெயர்

பாடவேறுபாடு—விளக்கம்

அச்சாதி இருபாலுக்கும் உரியது. (20)

## 431. எருமைப் பொதுப்பெயர்

மேதி, காரான் மயிடம், கவரி என்று
ஓதிய நான்கும் எருமைப் பெயரே

**எருமை பொதுப்பெயர் (4)**

1. மேதி, 2. காரான், 3. மயிடம், 4. கவரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: எருமைப் பெயர்
1:3 மகிடம்

முன் நூற்பாவில் எருமை என்பது இருபாற்கு முரித்தே என்றமையால் எருமை என்பது இருபாற் பொதுவாயிற்று.

430-431 ஆம் நூற்பாக்கள் ஒரே நூற்பாகவும் சில பிதிகளில் காணப்படுகின்றன. (21)

### 432. எருமை யாணின் பெயர்

பகடும், கடாவும் அவற்றின் போத்து ஆம்.

**எருமையின் பெயர் (2)**

1. பகடு, 2. கடா.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கடாவின் பெயர் (22)

### 433. மலட்டெருமையின் பெயர்

மைம்மை என்பது மலடட்டின் கிளவி

**மலட்டெருமையின் பெயர் (1)**

1. மைம்மை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மலட்டின் பெயர் (23)

### 434. காட்டாவின் பெயர்

ஆமா, கவயம், காட்டா ஆகும்.

**காட்டாவின் பெயர் (2)**

1. ஆமா, 2. கவயம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : காட்டுப் பசுவின் பெயர்.

2 கவையம். (24)

### 435 யாட்டின் பொதுப்பெயர்

மறி, உதள், மோத்தை, மேழகம், வருடை,
கொறியே, தகர், கிடாய், கொச்சை, மேடம்,
துருவை, செம்மறி, பள்ளை, வெள்ளை,
புருவை, வற்காலி, மை, யாடு எனப் புகல்வர்.

**யாட்டின் பொதுப்பெயர் (17)**

1. மறி, 2. உதள், 2. மோத்தை, 4. மேழகம், 5. வருடை, 6. சொறி, 7. தகர், 8. கிடாய், 9 கொச்சை, 10. மேடம், 11. துருவை, 12. செம்மறி, 13. பள்ளை, 14. வெள்ளை, 15. புருவை, 16. வற்காலி, 17. மை.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆட்டின் பொதுப்பெயர், ஆட்டின் சாதிப் பெயர்

2:2 தகர்கடா

3:4 வற்காலி, 2. செம்மறி

4:2 வெள்ளை (25)

### 436. துருவாட்டின் பெயர்

துருவை, மை, கொறி, துருவாடு ஆகும்

**துருவாட்டின் பெயர் (3)**

1. துருவை, 2. மை, 3. கொறி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : செம்மறியாட்டின் பெயர்

2 கொறிமை (26)

### 437. வெள்ளாட்டின் பெயர்

வெள்ளை, வற்காலி, கொச்சை, வெள்ளாடே.

**வெள்ளாட்டின் பெயர் (3)**

1. வெள்ளை, 2. வற்காலி, 3. கொச்சை.

பாடவேறுபாடு—விளக்கம்

2. வற்காலிமை (27)

### 438. துருவாட்டேற்றின் பெயர்

ஏழகம், தகரே, மேழகம், கிடாய் என
ஆகும் துருவாட்டு ஏற்றின் பெயரே.

**துருவாட்டேற்றின் பெயர் (4)**

1 ஏழகம், 2. தகர், 3. மேழகம், 4. கிடாய்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : செம்மறியேற்றின் பெயர்

1:2 தகர், 4 கிடாயென், கடாயென்

2:1 நாகுந் (28)

### 439. வெள்ளாட்டேற்றின் பெயர்

உதளே செச்சை, மோத்தை, வெள் ளாட்டின்
நிகர் இல் ஏறுஎன நிகழ்த்தவும் படுமே.

**வெள்ளாட்டேற்றின் பெயர் (3)**

1. உதள், 2 செச்சை, 3 மோத்தை.

பாடவேறுபாடு—விளக்கம்

நிகரி லேற்றின் னிக்கப் படுமே. (29)

### 440. ஆட்டுக்குட்டியின் பெயர்

குட்டன், சோரன், மணங்கு, மறி, பறழ்,
குட்டிப் பெயர்எனக் கூறல் வேண்டும்.

**ஆட்டுக்குட்டியின் பெயர் (5)**

1 குட்டன், 2. சோரன், 3. மணங்கு, 4. மறி,
5. பறழ்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆட்டுமறியின் பெயர்
1:1-2 குட்டம் சோரம் 3. அணங்கு,
2:3-4 கூறினர் புலவர் (30)

### 441. வரையாட்டின் பெயர்

வருடை, சரபம், வரையாடு ஆகும்.

**வரையாட்டின் பெயர் (2)**

1. வருடை, 2. சரபம்,

பாடவேறுபாடு—விளக்கம்

2. சாபம் (31)

### 442. கவரிமாவின் பெயர்

மானமா, பட்டம், எகினம், அன்னம்.
(ஊனம்இல்) கவரிமாஎனச் செப்புவர்

**கவரிமாவின் பெயர் (4)**

1. மானமா, 2. பட்டம், 3. எகினம், அன்னம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கவரிமானின் பெயர்
2:3 மானெனச் (32)

### 443. கழுதையின் பெயர்

கத்தவம், கோகு, வேசரி, கழுதை
அத்திரி, கரமாறும், அவற்றின் பெயரே



**கழுதையின் பெயர் (5)**

1. கத்தவம், 2. கோகு, 3. வேசரி, 4. அத்திரி,
5. கரமாறு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 கத்தபம், கர்த்தபங்
2:2 ஐந்தும்
அத்திரி கரமொடு வாலேப மாகும். (33)

### 444. கோவேறு கழுதையின் பெயர்

கோகு, வேசரி, கோவேறு கழுதை

**கோவேறு கழுதையின் பெயர் (2)**

1. கோகு, 2. வேசரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கோவேறு கழுதைப் பெயர்
இந்நூற்பா,
'வேசரி கோவேறு கழுதை யாகும்' என்றும்,
'வேசரி கோவேறு கழுதைக்கு மாகும்' என்றும்
'அத்திரி யென்பது கோவேறு கழுதை' என்றும்
வேறுபாட்டுடன் காணப்படுகிறது. இப்பெயர் சில பிரதிகளில்
இல்லை. (34)

### 445. பன்றியின் பெயர்

இருளி, கனலி, ஏனம், சூகரம்,
கருமா, மோழல், வல்லுழி, கேழல்,
(வன்திறல்) வராகம், எறுழி, கோலம்,
(ஒன்றிய) களிறுஇவை பன்றி ஆகும்.

**பன்றியின் பெயர் (12)**

1. இருளி, 2. கனலி, 3. ஏனம், 4. சூகரம், 5. கருமா, 6. மோழல், 7. வல்லுழி, 8. கேழல், 9. வராகம், 10. எறுழி, 11. கோலம், 12 களிறு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2-4 மேழல் கேழல் வல்லுழி
3:1 ஒண்டிறல், 4. கான்மா
3 ஆம் அடிக்குப் பின்,
'கிருட்டி போத்து மைம்மா கிருகிடி'
என்று சில பிரதிகளில் ஓரடி அதிகம் உள்ளது.

கீட மைம்மா போத்திரி கிருட்டி
நாடுங் கிருகிடி யரிபூ தாரம்
கோடி குரோடங் கோலம் வனமா
வன்றிறல் வராக மெறுழி கான்மா
ஒன்றிய களிறிவை பன்றி யாகும்
என்று ஒரு பிரதி. (35)

## 446. மருட்டுப் பன்றியின் பெயர்

கிருட்டி, போத்து, கோலம், கிருகிடி.
மருட்டுப் பன்றிக்கு மாட்சிப் பெயரே.

**மருட்டுப் பன்றியின் பெயர் (4)**

1. கிருட்டி, 2. போத்து, 3. கோலம், 4. கிருகிடி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆண் பன்றியின் பெயர்
கிரிகிடி-அச்சுப்பிரதி. கிரி, கிடி இரு பெயராகத் தரப் பட்டுள்ளது. (36)

## 447. முட்பன்றியின் பெயர்

எய்யே, முண்மா, சல்லியம், முட்பன்றி.

**முட்பன்றியின் பெயர் (3)**

1. எய், 2. முண்மா, 3, சல்லியம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முள்ளம்பன்றியின் பெயர்
2. முளவு (37)

## 448. மானின் பெயர்

நவ்வி, மறி, பிணை, அருணம், உழை எனச்
சொல்லிய ஐந்தும் மானின் தொல்பெயர்.

**மானின் பெயர் (5)**

1. நவ்வி, 2 மறி, 3. பிணை, 4. அருணம், 5. உழை,

பாடவேறுபாடு—விளக்கம்

சாரயன நவ்வி மறிபிணை யரிணம்
உழையெனச் சொல்லிய வாறு மானின் பெயர்.

என்றும் வேறுபட்டுச் சில பிரதிகள் உள. 'சாரயனம்' என்பதற்குச் 'சாரங்கம்' என்றும், 'அரிணம்' என்பதற்கு 'அருணம்' என்றும் பாடவேறுபாடும் உண்டு. (38)



## 449. மானேற்றின் பெயர்

இரலையும், கலையும், அவற்றின் ஏறு ஆம்.

**மானேற்றின் பெயர் (2)**

1. இரலை, 2. கலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கலையின் பெயர் (39)

## 450. இரலையின் பெயர்

இரலை, புல்வாய் ஆகலும் உரித்தே

**இரலையின் பெயர் (1)**

1. புல்வாய்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : புல்வாயின் பெயர்
3-4 என்னவும் பெறுமே (40)

## 451 கரடியின் பெயர்

உளியமும் எண்கும் பல்லமும் கரடி
குடாவடி என்பதும் மற்றதன் பெயரே

**கரடியின் பெயர் (4)**

1. உளியம், 2. எண்கு, 3. பல்லம், 4. குடாவடி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 பல்லங் கரடி
குடாவடி யென்பது மற்றதன் மேற்றே
குடாவடி யென்றுங் கூறல் வேண்டும்
குடாவடி யென்றுங் கூறவும் படுமே.

'உளிய மெண்கு பல்லங் குடாவடி கரடி'
என்று ஒரு பிரதிப் பாடம். (41)

## 452. நரியின் பெயர்

இகலன், சம்பு, நரி என இசைப்பர்
ஓரி, கோமாயு என்றலும் ஆகும்.

**நரியின் பெயர் (4)**

1. இகலன், 2. சம்பு, 3. ஓரி, 4. கோமாயு.

பாடவேறுபாடு—விளக்கம்

இகலன் சப்பு கோமாயு நரியாம்.
நரியே என்றும் பாடம். (42)

## 453. ஓரியின் பெயர்

இகலன், ஓரி என்னவும் ஆகும்.

**ஓரியின் பெயர் (1)**

1. இகலன்

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 என்னலு மாகும், என்று மாகும்
'ஓரி கோமாயு வென்றலு மாகும்' என்றும் ஒரு பிரதி. (43)

## 454. பூஞையின் பெயர்

விலாளம், பவனம், வெருகு, விடருகம்,
பூசை, பாக்கன், மார்ச்சாலம், பூஞை

**பூஞையின் பெயர் (7)**

1. விலாளம், 2. பவனம், 3. வெருகு, 4. விடருகம், 5. பூசை, 6. பாக்கன், 7. மார்ச்சாலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 பூச்சை, 3. மாச் சாரம், மாற்சாரம். (44)

## 455. ஆண்பூனையின் பெயர்

விலாளமும், கடுவனும், வெருகும், ஆண்பெயர்.

**ஆண்பூனையின் பெயர் (3)**

1. விலாளம், 2. கடுவன், 3. வெருகு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வெருகின் பெயர், (45)

## 456. கீரியின் பெயர்

நகுலம், காத்திரம், தீர்வை, கீரி.

**கீரியின் பெயர் (3)**

1. நகுலம், 2. காத்திரம். 3. தீர்வை.

பாடவேறுபாடு—விளக்கம்

நகிலிங் காத்திரி கீரியென நவில்வர் (46)



## 457. முயலின் பெயர்

சசம், முயல் என்று சாற்றப் படுமே

**முயலின் பெயர் (1)**

1. சசம்.

பாடவேறுபாடு—விளக்கம்

'சசமு மயமு முயலெனச் சாற்றுவர்' என்பது
சில பிரதிப் பாடம். (47)

## 458. கத்தூரியின் பெயர்

மறவி, நாவி, மான்மதம், துருக்கம்,
நரந்தம், நானம், மறி, கத்தூரி.

**கத்தூரியின் பெயர் (7)**

1. மறுவி, 2. நாவி, 3. மான்மதம், 4. துருக்கம், 5. நரந்தம், 6. நானம், 7. மறி.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3 மறுவல் (48)

## 459. குரங்கின் பெயர்

அரியே, கோகிலம், கடுவன், கோடரம்,
கவியே, யூகம், மந்தி, மர்க்கடம்,
நிரந்தம், வானரம், என்றுஇவை பத்தும்
குரங்கின் பெயர் எனக்கூறுவர் புலவர்.

**குரங்கின் பெயர் (10)**

1. அரி, 2. கோகிலம், 3. கடுவன், 4. கோடரம், 5. கவி, 6. யூகம், 7. மந்தி, 8. மர்க்கடம், 9. நிரந்தம் 10. வானரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 கோகுலம்
2:2 ஊகம், 4. மற்கடம்
3:1 நிரந்தரம்
4:3-4 கூறல் வேண்டும் (49)

## 460. பெண்குரங்கின் பெயர்

மந்தி, யூகம், மற்றதன் பெண்பெயர்.

**பெண்குரங்கின் பெயர் (2)**
1. மந்தி, 2. யூகம்.

பாடவேறுபாடு—விளக்கம்
1-2 மந்தியும் முகமும் (50)

## 461. கருங்குரங்கின் பெயர்

காருகம், யூகம், கருங்குரங்கு ஆகும்.

**கருங்குரங்கின் பெயர் (2)**
1. காருகம், 2. யூகம்.

பாடவேறுபாடு—விளக்கம்
1-2 காருகமூகம் (51)

## 462. முசுவின் பெயர்

ஓரியும், கலையும், கடுவனும், முசுவே

**முசுவின் பெயர் (3)**
1. ஓரி, 2. கலை, 3. கடுவன்.

பாடவேறுபாடு—விளக்கம்
3. களவனும் (52)

## 463. நாயின் பெயர்

எகினம், சூரன், முடுவல், சுணங்கன்,
ஞமலி, குக்கல், ஞாளி, சுவானம், நாய்.

**நாயின் பெயர் (8)**
1. எகினம், 2. சூரன், 3. முடுவல், 4. சுணங்கன், 5. ஞமலி, 6. குக்கல், 7. ஞாளி, 8. சுவானம்.

பாடவேறுபாடு—விளக்கம்
2:2 குக்கன் 4. சுவானன்நாய், சுவாநாய். (53)

## 464. பெண்ணாயின் பெயர்

முடுவல், பெண்ணாய். ஆம்என மொழிவர்.

**பெண்ணாயின் பெயர் (1)**
1. முடுவல்.

பாடவேறுபாடு—விளக்கம்
3-4 யாகவு மொழிப, யாகலு முரித்தே, (54)



## 465 ஊடும்பின் பெயர்

ஊடும்பே, முசலிகை, கோதா, ஆகும்.

**ஊடும்பின் பெயர் (2)**
1. முசலிகை, 2. கோதா.

பாடவேறுபாடு - விளக்கம்
2-3 கோதா முசலிகை
தடிமுசலி கோதா வு டும்பென லாகும். (55)

## 466. அணிலின் பெயர்

வெளிலே, அணில் ஆம்.

**அணிலின் பெயர் (1)**
1. வெளில்

பாடவேறுபாடு—விளக்கம்
அணிலே வெளிலாம்
வெளிலே யணிலா மென விளம் பினரே (56)

## 467. ஓந்தியின் பெயர்

எழிலி, தெண்டு, கோம்பி, ஓந்திஎன்று இசைப்பர்.

**ஓந்தியின் பெயர் (3)**
1. எழிலி, 2. தெண்டு, 3 கோம்பி.

பாடவேறுபாடு—விளக்கம்
1-2 எழில் தண்டு
அண்டச மோதி சரடம், சாயானதம்
ஓமான் தண்டு ஓந் தியென் றிசைப்பர்—என்பது
பிற்பதிப்புப் பாடம் (57)

## 468. பச்சோந்தியின் பெயர்

பச்சோந்தி, காம ரூபிப் பெயரே

**பச்சோந்தியின் பெயர் (1)**
1. காமரூபி

பாடவேறுபாடு—விளக்கம்
3-4 ரூபியாகப் பகர்வர்
காம ரூபி பச்சோந்தி யாகும். (58)

## 469. மூஞ்சூற்றின் பெயர்

சுண்டன், சூரன், சுந்தரி மூஞ்சூறு
என்றுஇவை எல்லாம் ஒன்றுஎன இசைப்பர்.

**மூஞ்சூற்றின் பெயர் (3)**

1. சுண்டன், 2. சூரன், 3. சுந்தரி,

**பாடவேறுபாடு—விளக்கம்**

1:3 சுசுந்தரி 4 சுவவு
2:3-4 ஒன்றென மொழிப, ஒன்றன் பால,
மூஞ்சூ றென்ப. (59)

## 470. எலியின் பெயர்

சிகரி, எலி, இரும்பன்.

**எலியின் பெயர் (2)**

1. சிகரி, 2. இரும்பன்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : இரும்பனெலியின் பெயர், இரும்பெலியின் பெயர்
சிகரி இரும்பன் எலியெனப் படுமே (60)

## 471. காரெலியின் பெயர்

கருப்பை, காரெலி.

**காரெலியின் மெயர் (1)**

1. கருப்பை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

470-471 ஆம் நூற்பாக்களை எலிக்கும் காரெலிக்கும்
பெயர் என்னும் தலைப்பிட்டு ஒரே நூற்பாவாகவும்
சில பிரதிகள் கொண்டுள்ளன. (61)

## 472. பெருச்சாளியின் பெயர்

ஆகு, மூடிகம், ஆம், பெருச் சாளி.

**பெருச்சாளியின் பெயர் (2)**

1. ஆகு, 2. மூடிகம்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

3-4 ஆகு மென்ப, பெருச்சாளி யாகும். (62)



## 473. ஒருசார் விலங்கேற்றின் பெயர்

களிறும், மாவும், ஒருத்தலும், ஏறும்,
போத்தும், பகடும், கலையும், உப்பலும்,
கடுவனும், சேவலும், தகரும், ஏட்டையும்,
ஒருசார் விலங்கின் ஏற்றைக் குரிய.

**ஒருசார் விலங்கேற்றின் பெயர் (12)**

1. களிறு, 2. மா, 3. ஒருத்தல், 4. ஏறு, 5. போத்து 6. பகடு, 7. கலை, 8. உம்பல், 9. கடுவன், 10. சேவல் 11. தகர், 12. ஏட்டை.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : ஒருசார் விலங்கின் ஆண்பெயர்,
4:3-4 ஏற்றிற் குரிய (63)

## 474. களிறு என்னும் பெயர்

அவற்றுள், வேழமும், கேழலும், வித்ந்து களிறு என்ப.

**களிறு என்னும் பெயர் (2)**

1. வேழம், 2. கேழல்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : களிறு என்னும் சொற்பொருட் பெயர்.
களிறு என்னும் சொல் மேற் சுட்டிய இரு பொருள்களுக்கும்
உரியது என்பது கருத்து. இவ்வாறே பின்வரும் இது போன்ற
பகுதிகளுக்குக் கருத்துரைக்க.
4. களிறெனல் (64)

## 475. மா என்னும் பெயர்

குதிரையும் யானையும் பன்றியும் மாவே.

**மா என்னும் பெயர் (3)**

1. குதிரை, 2, யானை, 3. பன்றி. (65)

## 476 ஒருத்தல் என்னும் பெயர்

புலி, உழை, புல்வாய், மரையே, எருமை,
கவரி, யானை, பன்றி, கரடி,
உரிய ஆகும் ஒருத்தல் பெயர்க்கொடை.

**ஒருத்தல் என்னும் பெயர் (9)**

1. புலி, 2. உழை. 3. புல்வாய், 4 மரை, 5. எருமை, 6. கவரி, 7. யானை, 8. பன்றி, 9. கரடி. (66)

## 477. ஏறு என்னும் பெயர்

கவரி, பன்றி, மரை, உழை, புல்வாய்,
எருமை, பெற்றம், சுறவு, ஏறு எனப்படுமே.

**ஏறு என்னும் பெயர் (8)**

1. கவரி, 2. பன்றி, 3. மரை, 4. உழை 5. புல்வாய், 6. எருமை, 7. பெற்றம், 8. சுறவு.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 எருது

3 ஆம் அடியாகத் 'துருவா டேறென்னவும் படுமே' என்று பிற்பதிப்புகளில் காணப்படும். (67)

## 478. போத்து என்னும் பெயர்

புலியே, மரையே, புல்வாய், பெற்றம்,
எருமைஎன்று இவற்றின் ஏற்றை போத்தே.
புகலின் நீர்வாழ் சாதியும் போத்தே.

**போத்து என்னும் பெயர் (6)**

1. புலி, 2. மரை, 3. புல்வாய், 4. பெற்றம், 5. எருமை, 6. நீர்வாழ்சாதி.

பாடவேறுபாடு—விளக்கம்

3 பூஜையு நீர்வாழ் சாதியும் போத்தே
குதிரை யாணும் போத்தெனப் படுமே.

இவ்வடிகள் சில பிரதிகளில் இல்லை. முதற்பதிப்பு இவற்றைத் தனித்தனி நூற்பாக்களாகத் தொடர்ந்து அமைத்துத் தந்துள்ளது. இவற்றின் பின், 'வெருகு போத்து என்னவும் படுமே' என ஓரடி சேர்த்து ஐந்து அடியாக இந்நூற்பா பிற்பதிப்புகளில் உள்ளது. (68)

## 479. பகடு என்னும் பெயர்

யானை, பெற்றம், எருமை, ஏற்றை,
தானே பகடு என்று உரைக்கத் தகுமே.

**பகடு என்னும் பெயர் (4)**

1. யானை, 2 பெற்றம், 3. எருமை, 4. ஏற்றை. (69)



## 480. கலை என்னும் பெயர்

மானே, முசுவே, கலையொடு வருமே.

**கலை என்னும் பெயர் (2)**

1. மான், 2. முசு.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 கலையெனப் படுமே (70)

## 481. உம்பல் என்னும் பெயர்

யானையும், யாட்டின் ஏற்றையும், உம்பல்.

**உம்பல் என்னும் பெயர் (2)**

1. யானை, 2. யாடு இவ்விரண்டன் ஆணிற்கு உரித்து.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 ஆனையு மாட்டின் (71)

## 482. கடுவன் என்னும் பெயர்

குரங்கின், ஏற்றைக் கடுவன் என்ப.

**கடுவன் என்னும் பெயர் (1)**

1. குரங்கின் ஏறு

பாடவேறுபாடு—விளக்கம்

குரங்கி னேற்றையும் பூசையுங் கடுவன்
குரங்கும் வெருகுங் கடுவ னென்ப-அச்சுப்பிரதி (72)

## 483. சேவல் என்னும் பெயர்

கோழி ஆண் நன் சேவல் ஆகும்:
குதிரை ஆணும் சேவல்எனப் படுமே.

**சேவல் என்னும் பெயர் (2)**

1. கோழியாண், 2. குதிரையாண்.

பாடவேறுபாடு—விளக்கம்

கோழியு மன்னமுஞ் சேவ லாகும்-அச்சுப்பிரதி
குதிரை யாணன் போத்தெனப் படுமே. (73)

## 484. தகர் என்னும் பெயர்

சுறவ, களிறு, ஆளி, துருவாட்டு ஏற்றை
தகர்எனும் நாமம் தக்கது என்ப.

**தகர் என்னும் பெயர் (4)**

1. சுறவு, 2. களிறு, 3. ஆளி, 4. துருவாடு இந்நான்கன் ஆணிற்கும் உரித்து.

பாடவேறுபாடு—விளக்கம்

1-1 சுறா
2:3-4 தக்கதென் றுரைப்பர். (74)

### 485 ஏட்டை என்னும் பெயர்

எருமைப் பகடும், வெருகின் ஏற்றையும்,
வருப ஏட்டை எனவகுத் தனரே

**ஏட்டை என்னும் பெயர் (2)**

1. எருமையான், 2. வெருகினாண். (75)

### 486. ஒருசார் விலங்கின் ஏற்றின் பெயர்

எருமை, புல்வாய், ஏற்றை, சேவும்,
துருவாட்டு ஏறும், வெருகின் போத்தும்,
ஒருசார் விலங்கின் ஏற்றைக்கு உரித்தே.

**ஒருசார் விலங்கின் ஏற்றின் பெயர் (5)**

1. எருமை ஏறு, 2. புல்வாய் ஏறு, 3. சே, 4. துருவாட்டு, ஏறு, 5. வெருகின் போத்து.

பாடவேறுபாடு—விளக்கம்

ஏறு என்னும் பெயர் பற்றிய 477ம் ஆம் நூற்பாவுடன் ஒத்து நோக்கத்தக்கது.

தலைப்பு : ஒருசார் விலங்கினாண் பொதுப்பெயர்.
3:3-4 ஏற்றிற் குரிய.

சேவென்னும் பெயரும் ஏறென்னும் பெயரும் போத்தென்னும் பெயரும் வருமாறு என்று தந்து, ஓர் ஏடு இந் நூற்பாவை அமைத்துள்ளது. நூற்பாவைத் தொடர்ந்து, இவற்றுள் இப்பெயர்களிவ்வாறு ஒருசார் விலங்கின் ஆணிற்குரியவாம், என்றும் குறிப்புக் காணப்படுகிறது.
அச்சுப்பிரதி இந்நூற்பாவுக்குத் தரும் பெயர்ப்பிரிவு விளக்கம் பின்வருமாறு :

சேவென்னும் பெயர்: எருமை யாணிற்கு புல்வா யாணிற்கு முரித்து.

ஏறென்னும் பெயர் : துருவாட்டாணிற்குரித்து.



போத்தென்னும் பெயர் : வெருகினாணிற் குரித்து.

இப்பெயர்களிவ்வாறொருசார் விலங்கினாணிற் குரியவாம்.

இவ்வாறு பிரித்துரைக்கத் தக்க வகையில் நூற்பா அமைப்பு இல்லை. ஆண்பாற் பெயர் பற்றிய பகுதியின் இறுதியாக வரும் இந்நூற்பா புறனடை போன்ற அமைப்பினது.

'ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப'

என்னும் தொல்காப்பிய நூற்பாவுடன் (தொல்பொருள் மரபு. 50) ஒப்பு நோக்கத்தக்கது. (76)

### 487. ஒருசார் விலங்கின் பெண்பொதுப் பெயர்

பெட்டையும், பிணையும், பிணாவும் உட்பட,
ஆவும், நாகும், பாட்டியும், மந்தியும்,
பேசில் ஒருசார் பெண்விலங்கின் பொதுப்பெயர்.

**ஒருசார் விலங்கின் பெண்பொதுப் பெயர் (7)**

1. பெட்டை, 2. பிணை, 3. பிணா, 4. ஆ, 5. நாகு, 6. பாட்டி, 7. மந்தி.

தலைப்பு : ஒருசார் விலங்கின் பெண்பெயர்
1-3-4 பிணவும் ஆனும்
2:4 என்றிவை
2. நாகு மூடுங் கடமையும் பாட்டியும்
3:2-4 ஒருவகை விலங்கின் பெண்
3. மந்தியு மொருசார் விலங்கின் பெண்பெயர் (77)

### 488. பெட்டை என்னும் பெயர்

அவற்றுள்,
ஒட்டகம், குதிரை, கழுதை, மரை இவை
பெட்டை என்னும் பெயர்க்கொடை பெறுமே.

**பெட்டை என்னும் பெயர் (4)**

1. ஒட்டகம், 2. குதிரை, 3. கழுதை, 4. மரை. இந்நான்கன் பெண்ணிற்கும் உரித்து.

பாடவேறுபாடு—விளக்கம்

1-4 மரையே (78)

### 489. பிணை என்னும் பெயர்

புலி, உழை, புல்வாய், கவரி என்றிவை
பிணை எனும் பெயரிற் பேசப் படுமே,

**பிணை என்னும் பெயர் (4)**

1. புலி, 2. உழை, 3. புல்வாய், 4. கவரி.
இந்நான்கன் பெண்ணிற்கும் உரித்து.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1 பிணையின்
இதனோடு,
'யானை குதிரை யொட்டகங் கழுதை
யான பிணையென் றறைதற்கு முரித்தே,'
எனச் சில பிரதிகளில் தனியாகவும் இணைந்து
காணப்படுகிறது. (79)

## 490. பிணா என்னும் பெயர்

பன்றி, புல்வாய், நாய் என மூன்றும்
பின்றாக் காட்சிப் பிணாவொடு வருமே.

**பிணா என்னும் பெயர் (3)**

1. பன்றி, 2. புல்வாய், 3. நாய்.
இம்மூன்றன் பெண்ணிர்கும் உரித்து.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 பிணாவொடு
2:1 பின்றாங் (80)

## 491. ஆ என்னும் பெயர்

எருமையும் பசுவும் மரையும் என்றுஇவை
வருப மூன்றும் ஆ எனப் படுமே.

**ஆ என்னும் பெயர் (3)**

1. எருமை, 2. பசு, 3. மரை,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆன் என்னும் பெயர்
1:4 மானென்ப, மென்று, மென்ன
2:1 வருபவை 3 மானெனப் (81)

## 492 நாகு என்னும் பெயர்

மரையும், பெற்றமும், எருமையும் நாகே,
(நீர்வாழ் சாதியுள்) நந்தும் நாகே,



**நாகு என்னும் பெயர் (4)**

1. மரை, 2. பெற்றம், 3. எருமை, 4. நந்து.

பாடவேறுபாடு—விளக்கம்

2. நந்தும் நீர்வாழ் சாதியும் நாகே.
இந்த அடி சிலபிரதிகளில் இல்லை. இதனைத் தனி
நூற்பாவாக அச்சுப்பிரதி தந்துள்ளது.

இதன்பின் மூடென்பதுக்கும் கடமையென்பதுக்கும் பெயர்
என்னும் தலைப்பில், 'மூடுங் கடமையு மாடல பெறா'
என்றொரு நூற்பா காணப்படுகிறது. இது பல பிரதிகளில்
இல்லை. (82)

## 493. பாட்டி என்னும் பெயர்

பன்றியும் நாயும் பாட்டி என்று ஆகும்.

**பாட்டி என்னும் பெயர் (2)**

1. பன்றி, 2. நாய்.

பாடவேறுபாடு—விளக்கம்

பன்றியு நாயும் பாட்டியெனப் படுமே
பாட்டி யென்பது பன்றியு நாயும்.
பாட்டி யென்ப பன்றியு நாயும்

இதனோடு இணைந்து,
'நரியு மற்றே நாடினர் கொளினே'
என ஓர் அடி சில பிரதிகளில் உள்ளது. 'கொளலே' என்று
பாட வேறுபாடும் உண்டு. இதனைத் தனி நூற்பா
வாகவும் ஒரு சில பிரதிகள் தருகின்றன. 'நரியிற் பாட்டி
நடைபெற் றியலும்' என்றும் வேறுபட்டுக் காண்கிறது.
இந்நூற்பா பல பிரதிகளில் இல்லை, அச்சுப் பிரதியிலும்
இல்லை. (83)

## 494. மந்தி என்னும் பெயர்

குரங்கும் யூகமும் முசுவும் என்றுஇவை
வருங்கால் பெண்பெயர் மந்திஎன்று ஆகும்.

**மந்தி என்னும் பெயர் (3)**

1. குரங்கு, 2. யூகம், 3. முசு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 ஊகமும் (84)

474ஆம் நூற்பாவின் தலைப்பு வேறுபாடு போலவே 494ஆம் நூற்பாவரை ஒவ்வொரு பெயருடனும் சொற்பொருட் பெயர் என்பது இணையும் வகையில் தலைப்பு வேறுபாடு உள்ளது.

இதன் பின்னர் அச்சுப்பிரதியில் இரு நூற்பாக்கள் தரப்பட்டுள்ளன. அவை வருமாறு :

ஆனை குதிரை யொட்டகங் கழுதை
யான பிணையென் றறைதற் குரிய

நரியிற் பாட்டி நடைபெற் றியலு
மொருசார் விலங்கின் பெண்பெயர்க் குரைப்பர்.

இவை 489, 493 ஆம் நூற்பாக்களில் வரும் பொருள்களே, கூறியது கூறலாக வரும் இவை அவற்றின் மாற்று வடிவம் ஆகும். முந்தியதை 489 ஆம் நூற்பாவுடன் இணையாகவும் பிணைத்து ஒருசில பிரதிகள் தரும். இதுபோலவே பிந்தியதையும் 493 ஆம் நூற்பாவுடன் ஒருசில பிரதிகள் இணைத்துள்ளன. இவை பின்வந்தோர் சேர்த்த புதுச் சேர்க்கையாம்.

### 495. பெண் பெயர்

பெண்பால் எவையும் பெண் எனப் படுமே.

**பெண் என்னும் பெயர் (1)**

1. பெண்பால் எல்லாவற்றிற்கும் உரித்து.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பெண்ணென்னும் பெயர்
4. பெறுமே (85)

### 496. ஆண் பெயர்

ஆண்பால் எவையும் ஆண் எனப்படுமே.

**ஆண் பெயர் (1)**

1. ஆண்பால் எல்லாவற்றிற்கும் உரித்து

ாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆணென்னும் பெயர்
3-4 ஆணென் றாகும் (86)

### 497. விலங்கின் பெண் பெயர்

பெண்பால் எவையும் பிணா என்ப ஒருசார்.

**விலங்கின் பெண் பெயர் (1)**

1. பிணா



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பிணா என்னும் பெயர், பெண் பொதுப் பெயர்.
3. பிணவென்ப.
இந்நூற்பாவை ஆண் பெயருக்கு முன்பாக அமைத்துத் தந்துள்ளது அச்சுப்பிரதி. (87)

### 498. போதகம் என்னும் பெயர்

அரிமா, யானை, புலியே அனைய
இனைய ஏற்றைப் போதகம் என்ப.

**போதகம் என்னும் பெயர் (3)**

1. அரிமா, 2. யானை, 3. புலி. இவை போல்பவற்றின் ஆணிற்கு உரியது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : போதகம் என்னும் சொற்பொருள் பெயர் (88)

### 499. விலங்கின் பிள்ளைப்பெயர்

குருளையும், குட்டியும், பறழும், பார்ப்பும்,
பிள்ளையும், மறியும், கன்றும், குழவியும்,
பெறுமே விலங்கின் பிள்ளைப் பெயரே.

**விலங்கின் பிள்ளைப் பெயர் (8)**

1. குருளை, 2. குட்டி, 3. பறழ், 4. பார்ப்பு, 5. பிள்ளை, 6. மறி, 7. கன்று, 8. குழவி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 பிள்ளையும்
2:4 பார்ப்பும் (89)

### 500. குருளை, பறழ் என்னும் பெயர்

அவற்றுள்,
புலியே, பன்றி, முயல், நாய், நரியே
குருளை, பறழ் எனக் கூறினர் புலவர்

**குருளை, பறழ் என்னும் பெயர் (5)**

1. புலி, 2. பன்றி, 3. முயல், 4. நாய், 5. நரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குருளை, பறழ் என்னும் சொற்பொருட் பெயர்,
இவ்வாறே குருளை கன்று குழவி என்னும் பெயர் குறிக்கும்

நூற்பாவரையில் (507) தலைப்புப் பெயருடன் சொற்பொருட் பெயர் என்பது இணைய வரும் வகையில் தலைப்பு வேறுபாடு காணப்படுகிறது. (90)

## 501. பிள்ளை என்னும் பெயர்

பிள்ளைப் பெயரும் நாய் அன்றிப் பெறுமே.

**பிள்ளை என்னும் பெயர் (4)**

நாய் ஒழிந்தவற்றிற்கு உரியது.
1. புலி, 2. பன்றி, 3. முயல், 4. நரி.

பாடவேறுபாடு—விளக்கம்
2. பெயரே (91)

## 502. மறி என்னும் பெயர்

மான் இனமும், ஆடும், அழுங்கும் மறி என்ப.

**மறி என்னும் பெயர் (3)**

1. மான், 2. ஆடு, 3. அழுங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்
ஆடுமான் குதிரை யழுங்குமறி யென்ப-என்பது அச்சுப்பிரதி. (92)

## 503. கோடு வாழ் விலங்கின் பிள்ளைப் பெயர்

குழவியும் மகவும், குட்டியும், பிள்ளையும்,
பறழும், பார்ப்பும், பகரப் படுமே.
குரங்குமுத லாயின கோடுவாழ் விலங்கே.

**கோடுவாழ் விலங்கின் பிள்ளைப் பெயர் (6)**

1, குழவி, 2. மகவு, 3. குட்டி, 4. பிள்ளை, 5, பறழ், 6. பார்ப்பு.

பாடவேறுபாடு—விளக்கம்
1:3 குட்டனும்
2:3-4 கூறப் படுமே, அவற்றின் பால
இப்பிள்ளைப் பெயர்கள் குரங்கு முதலாகிய மரக்கொம்பில் வாழும் விலங்கிற்கு உரியவாம் என்க.
3ஆம் அடி தனி நூற்பாகவும் சில பிர்திகளில் உள்ளது. (93)

## 504. கன்று என்னும் பெயர்

கடமையும், யானையும், குதிரையும், கழுதையும்,
மரையும், எருமையும், மானும், ஒட் டகமும்,
கவரியும், கராமும், கன்று எனப் படுமே.



**கன்று என்னும் பெயர் (10)**

1. கடமை, 2. யானை, 3. குதிரை, 4. கழுதை, 5. மரை, 6. எருமை, 7. மான், 8. ஒட்டகம், 9, கவரி, 10. கராம். இவ்விலங்குகளின் இளமைக்குக் 'கன்று' என்னும் பெயரிட்டு வழங்குவர். இதுபோன்றே பின்வரும் குழவி, பறழ் முதலிய இளமைப் பெயர்களையும் கருதுக. (94)

## 505. குழவி என்னும் பெயர்

யானை யும், கடமையும், எருமையும், மரையும்,
மானும், குழவிப் பெயரொடு அடையும்.

**குழவி என்னும் பெயர் (5)**

1. யானை, 2. கடமை, 3. எருமை, 4. மரை, 5. மான்.

பாடவேறுபாடு—விளக்கம்
2:1 ஆனும், 3. பெயரொடு (95)

## 506. பறழ் குட்டி என்னும் பெயர்

வெருகு, எலி, மூங்கா, அணில் என நான்கும்
பறழே, குட்டிப் பால ஆகும்.

**பறழ் குட்டி என்னும் பெயர் (4)**

1. வெருகு, 2. எலி, 3. மூங்கா, 4. அணில்.

பாடவேறுபாடு—விளக்கம்
1. வெருகே மூங்கா அணிலென மூன்றும்-அச்சுப்பிரதி 'வெருகே பன்றி' என்பது பிறபதிப்புகள். (96)

## 507. குருளை, கன்று, குழவி என்னும் பெயர்

குருளையும் கன்றும் ஆனிற் கொளலும்
குழவியும் முசுவின் குணநடை பெறினும்
ஒருசார் விலங்கின் பிள்ளைப் பெயரே.

**குருளை, கன்று, குழவி என்னும் பெயர் (1)**

1. குருளை, கன்று ஆனிற்கு, குழவி முசுவிற்கு என்க.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 ஆவிற்
2:4 பெறலும்
2. குழவியுங் குருளையு முசுவிற்பெறலும்-
அச்சுப்பிரதி. (97)

## 508. பிள்ளை, பார்ப்பு என்னும் பெயர்

பிள்ளையும், பார்ப்பும், தவழ்சாதி பெறுமே

**பிள்ளை, பார்ப்பு என்னும் பெயர் (1)**

1. தவழ் சாதிக்கு உரிய.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தவழ் சாதிப் பிள்ளைப் பெயர் (98)

## 509. ஏற்றை, குருளை என்னும் பெயர்

நந்தின் ஏற்றையும், அரவின் குருளையும்
வந்துழி ஒருசார் வழங்குதற்கு உரிய.

**ஏற்றை குருளை என்னும் பெயர் (1)**

1. நந்தின் ஆணிற்கு ஏற்றைப் பெயரும் அரவிற்குக் குருளைப் பெயரும் உரியவாம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3 மாவிற், மானிற்
2:4 குரித்தே (99)

## 510. விலங்கின் பெயர்

மாவும், மானும், விலங்கின் பொதுப்பெயர்.

**விலங்கின் பொதுப்பெயர் (2)**

1. மா, 2. மான். (100)

## 511. காலியினத்தின் பெயர்

காலியினம், நிரை, தொறுஆகும்மே.

**காலியினத்தின் பெயர் (2)**

1. நிரை, 2. தொறு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பசுநிரையின் பெயர், பசுக்கூட்டத்தின் பெயர்
1-2 காலி யினனிரை, 3-4 தொறுவு மாகும். (101)



## 512. விலங்கின் கூட்டத்தின் பெயர்

கணமும், சாலமும், வியூகமும், குலமும்,
விருந்தமும் கூட்டமும் எனப்பிறவும் ஆகும்
வந்துழிப் பெறுதற்கு உரிய என்ப.

**விலங்கின் கூட்டத்தின் பெயர் (5)**

1. கணம், 2. சாலம், 3. வியூகம், 4. விருந்தம், 5. கூட்டம், பிற பெயரும் வந்துழிக் கொள்க.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 எனப் பெயர் பெறுமே, எனப்பிற பாற்கும், எனப் பிறப்பாகும். (102)

## 513 வாலுறுப்பின் பெயர்

வாலதி, தோகை, கூலம், இலாங் கூலம்
வாலுறுப் பாக மதித்தனர் புலவர்.

**வாலுறுப்பின் பெயர் (4)**

வாலதி, 2. தோகை, 3. கூலம், 4. இலாங்கூலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வாலின் பெயர்
1:3-4 கூலு மிலாங்குலம். (103)

## 514. வாற்கீழிடத்தின் பெயர்

வெருகம் என்பது வாற்கீ ழிடம் ஆம்.

**வாற்கீழிடத்தின் பெயர் (1)**

1. வெருகம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வாற்கீழின் பெயர் (104)

## 515. யானைச் செவியின் பெயர்

யானைச் செவி, கன்ன தாலம் ஆகும்.

**யானைச் செவியின்பெயர் (1)**

1. கன்னதாலம்

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 செவியே கன்னதாலம்; கன்னம் தாலம் எனப் பிறபதிப்புக்கள். (105)

### 516. யானை முதுகின் பெயர்

மஞ்சு முதுகே ஆகும் என்ப.

**யானை முதுகின் பெயர் (1)**

1. மஞ்சு

பாடவேறுபாடு—விளக்கம்

2-4 முதுகென வகுத்தனர் புலவர்-என்பது அச்சுப்பிரதி.

முதுகின் பெயர் முன்னும் செவியின் பெயர் பின்னுமாகவும் சில பிரதிகள். 515-516 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாக,

'மஞ்சு முதுகு ஆனைச்செவி கன்னதாலம்'

என்றும் ஒரு பிரதி தந்துள்ளது. (106)

### 517. யானை வாலின் பெயர்

வால், தால வட்டம் ஆகும் என்ப.

**யானை வாலின் பெயர் (1)**

தால வட்டம்

பாடவேறுபாடு—விளக்கம்

1. வாலது, வாலதி 2-4 தால வட்ட மாகும். (107)

### 518. யானை மதத்தின் பெயர்

கடமும், தானமும், மதம் ஆ கும்மே

**யானை மதத்தின் பெயர் (2)**

1. கடம், 2. தானம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கரடத்தின் பெயர் (108)

### 519. கவுட் சுவட்டின் பெயர்

கரடம் மதம்பாய் கவுட்சுவடு ஆகும்.

**கவுட் சுவட்டின் பெயர் (1)**

1. கரடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : யானைக்கவுளின் பெயர், கரடமென்னும் பெயர்

3. கவிட் சுவடு (109)



### 520. மும்மதத்தின் பெயர்

கன்னமதம் கோசமதம் கைம்மதம் மூவகையே

**மும்மதத்தின் பெயர் (3)**

1. கன்னமதம், 2, கோசமதம், 3. கைம்மதம்

இந்நூற்பா ஒருசில பிரதிகளில் இல்லை. (110)

### 521. யானைக்காலின் பெயர்

காத்திரம், அங்கிதம், தாள், கால் ஆகும்

**யானைக்காலின் பெயர் (3)**

1. காத்திரம், 2. அங்கிதம், 3. தாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : காலின் பெயர்

2. அபரம்-பிற்பதிப்புகள்

'தாளின் பெயர்' என்னும் தலைப்புடன் அச்சுப்பிரதியில் காணும் பாடம் 'காத்திர மங்கிதந் தாளா கும்மே' என்பது. (111)

### 522. குதிரைவாயினும் யானைக்கையினும் உமிழ்நீரின் பெயர்

இவுளி வாயினும் யானைக் கையினும்
உமிழ் நீர், விலாழி என்று உரைக்கத் தகுமே.

**குதிரை வாயினும் யானைக் கையினும் உமிழ்நீர் (1)**

1. விலாழி

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : குதிரை வாயினும் யானைக் கையினும் வருநீரின் பெயர், விலாழி என்னும் பெயர் (112)

### 523. எருத்தின் முரிப்பின் பெயர்

இமிலே ஏற்றின் திரள்முரிப்பு ஆகும்

**எருத்தின் முரிப்பின் பெயர் (1)**

1. இமில்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இமில் என்னும் பெயர், முரிப்பில் பெயர், திரண்முரிப்பின் பெயர் (113)

### 524. மடியின் பெயர்

செருத்தல் முலைமேல் திரள்சுரப்பு மடியே

**மடியின் பெயர் (1)**

1. செருத்தல்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முலைமேல் திரள் சுரப்பு வடிவின் பெயர், சுரப்பு வடிவின் பெயர், செருத்தல் என்னும் பெயர்

பாடவேறுபாடு—விளக்கம்

4. வடிவே. (114)

### 525. பசுமுலையின் பெயர்

சுரைஎன் பெயரே முலையிற்கு ஆகும்

**பசுமுலையின் பெயர் (1)**

1. சுரை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : முலையின் பெயர், விலங்கின் முலையின் பெயர்.

1. சுரையின்

3-4 முலையிற்கு மாகும்

சுரையே பெயரான் முலையிற்கு நாமம்— என்று ஒரு பிரதிப்பாடம். (115)

### 526. கொம்பின் பெயர்

கோடும், மருப்பும், உலவையும், கொம்பே

**கொம்பின் பெயர் (3)**

1. கோடு, 2. மருப்பு, 3. உலவை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : விலங்கின் கொம்பின் பெயர் (116)

### 527. தோலின் பெயர்

வடகும், கிருத்திமம், சருமம், துவக்கு,
பச்சை, புறணி, உரிவை, உரி, அதள்,
(ஒத்த) துருத்தியொடு, பத்தும் தோலே

**தோலின் பெயர் (10)**

1. வடகம், 2. கிருத்திமம், 3. சருமம், 4. துவக்கு,



5. பச்சை. 6. புறணி, 7. உரிவை, 8. உரி, 9. அதள், 10. துருத்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தொலியின் பெயர்

2:3-4 ஒலிய லுரியதள், உரிபோர் வையதள் (117)

### 528. ஊனின் பெயர்

தசை, தடி, விடக்கு, தூ, வள் ளூரம்,
பிசிதம், புலால், புண், புலவும் ஊனே.

**ஊனின் பெயர் (9)**

1. தசை, 2. தடி, 3. விடக்கு, 4. தூ, 5. வள்ளூரம், 6. பிசிதம், 7. புலால், 8. புண், 9. புலவு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 தூவு வள்ளூரம், தூஉ வள்ளூரம்

2:2 புலால்புறணி (118)

### 529. ஆவினிறைச்சிப் பெயர்

ஆவின் இறைச்சி வள்ளூரம் ஆகும்

**ஆவினிறைச்சிப் பெயர் (1)**

1. வள்ளூரம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆவினிறைச்சியின் பெயர்

3. வள்ளுரம் (119)

### 530. உதிரத்தின் பெயர்

எருவை, செந்நீர், இரத்தம், புண்ணீர்,
குருதி, சோரி, நெய்த்தோர், சுடுவனம்,
கறையொடு, சோணிதம் எனஈ ரைந்தும்
உதிரம் என்ப உணர்ந்திசி னோரே

**உதிரத்தின் பெயர் (10)**

1. எருவை, 2. செந்நீர், 3. இரத்தம், 4. புண்ணீர், 5. குருதி, 6. சோரி, 7. நெய்த்தோர், 8. சுடுவனம். 9. கறை. 10. சோணிதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இரத்தத்தின் பெயர்

2:3-4 நெய்த்தோர் புலானீர் சுடுவனம், 4. சுடுவன். சுடுவல்

3:1-2 இரணி கறையொடு
3 கறைசோ ணிதமென வீரைங் கிளவியும் .
கறை செம்பால் சோணித முதிர மீராறே. (120)

### 531. நிணத்தின் பெயர்

நெய்யும், இழுதும், விழுக்கும், நிணப் பெயரே

**நிணத்தின் பெயர் (3)**
1. நெய், 2. இழுது, 3. விழுக்கு

பாடவேறுபாடு—விளக்கம்
3-4 விழுக்கு நிணப் பெயர், விழுக்கு நிணமாம். (121)

### 532. முடையின் பெயர்

பூதி, ஊழ்த்தல், தசை, புலவு, முடையே.

**முடையின் பெயர் (4)**
1. பூதி, 2. ஊழ்த்த , 3. தசை, 4. புலவு.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : முடைநாற்றத்தின் பெயர்
1. பூழ்தி, பூழ்த்தி, 2. பூழ்த்தசை (122)

### 533 சூலின் பெயர்

பீளும், சினையும், கருவும், சூலே

**சூலின் பெயர் (3)**
1. பீள், 2. சினை, 3. கரு. (123)

### 534. பாம்பின் பெயர்

அரவே, நாகம், அங்கதம், புயங்கம்,
உரகம், மராளம், மிருதம், பன்னகம்,
பணி, அரி, கட்செவி, பாம்புஎனப் படுமே

**பாம்பின் பெயர் (11)**
1. அரவு, 2. நாகம், 3. அங்கதம். 4. புயங்கம், 5. உரகம், 6. மராளம், 7. மிருதம், 8. பன்னகம், 9. பணி, 10. அரி, 11. கட்செவி.



பாடவேறுபாடு—விளக்கம்
2:2 பாந்தள்
2:2-3 வியாளம் அரிதம், 3-4 அரியகி பன்னகம்,
அரியகி போகி
3. பணியே கட்செவி பாம்பெனப் படுமே.
பணிகட் செவி வியாளம் பாம்பெனப் படுமே.
பன்னகம் கட்செவி பணிவியாளம் பாம்பே. (124)

### 535. பெரும்பாம்பின் பெயர்

பாந்தள், மாசுணம், பெரும்பாம்பு ஆகும்

**பெரும்பாம்பின் பெயர் (2)**
1. பாந்தள், 2. மாசுணம். (125)

### 536. பாம்பின் படத்தின் பெயர்

பையும், பணமும், பாம்பின் படமே.

**பாம்பின் படத்தின் பெயர் (2)**
1. பை, 2. பணம்.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : படத்தின் பெயர் (126)

### 537. படப்பொறியின் பெயர்

உத்தியும், துத்தியும், உரக படப்பொறி

**படப்பொறியின் பெயர் (2)**
1. உத்தி, 2. துத்தி.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : படத்தெழுந்தின் பெயர், பாம்பின் படப்
பொறியின் பெயர் (127)

### 538. நஞ்சின் பெயர்

கடுவே, ஆலம், காள கூடம்,
விடம், காளம், கரளம், காரி, நஞ்சே

**நஞ்சின் பெயர் (7)**

1. கடு, 2. ஆலம், 3. காளகூடம், 4. விடம், 5. காளம், 6. கரளம், 7. காரி.

பாடவேறுபாடு—விளக்கம்

2. விடமே காளங் காரி நஞ்சே

இதன் பின்னர்,

'நாங்கூழ் பூநாக நாக்கைப் பாம்பே' என்று ஒரு நூற்பா உள்ளது. 'நாகப் பாம்பே' என்றும் பாடவேறுபாடு உண்டு. இது பல பிரதிகளில் இல்லை. (128)

### 539. கருடன் பெயர்

வயினதேயன், உவணன், பன்னக வயிரி,
கலுழன், புள்ளரசு, கருடன் ஆகும்

**கருடன் பெயர் (5)**

1. வயினதேயன், 2. உவணன், 3. பன்னகவயிரி, 4. கலுழன், 5. புள்ளரசு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 வைனதேயன், வயினம், 2. உவணம்.
4 வைரி. (129)

### 540. கழுகின் பெயர்

எருவையும், உவணப் புள்ளும், கழுகே.

**கழுகின் பெயர் (2)**

1. எருவை, 2. உவணப்புள். (130)

### 541. வன்சிறைப் பறவையின் பெயர்

சிம்புள், வா ருண்டகம், அம்பர வணம், என
வன்சிறைப் பறவைக்கு வரும் பொதுப் பெயரே

**வன்சிறைப் பறவையின் பெயர் (3)**

1. சிம்புள், 2. வாருண்டகம், 3. அம்பரவணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சரபத்தின் பெயர், சரபப்புள்ளின் பெயர்
1:1-2 சிம்புள் வாருண்டம்
2:3-4 வரும்பெய ராகும்.



சிம்புள் வா ருண்டஞ் சம்பரந் துரோணம்
வன்சிறைச் சரபத்தின் வரும்பெய ராகும்.

இதன் இரண்டாம் அடிக்கு,

'எண்காற் சரபத்தின்பெய ராகும்' என்பது அச்சுப்பிரதி. இது வேறு வகையிலும் சில பிரதிகளில் காணப்படும்.

சிம்புட் பறவையின் பெயர்
எண்காற் பறவை சரபம் சிம்புள்.

வன்சிறைப் பறவையின் பெயர்
சிம்புள் வா ருண்டகம் சம்பரந் துரோணம்
அம்பர வாணம் வன்சிறைப் பறவை. (131)

### 542. பருந்தின் பெயர்

பாறும், சேனமும், கங்கமும், பருந்தே.

**பருந்தின் பெயர் (3)**

1. பாறு, 2. சேனம், 3. கங்கம், (132)

### 543. சாதகப்புள்ளின் பெயர்

வானம் பாடி, சாதகப் புள்ளே

**சாதகப்புள்ளின் பெயர் (1)**

1. வானம்பாடி. (133)

### 544. அசுணப்புள்ளின் பெயர்

அசுண மாவே, கேகயப்புள்ளே

**அசுணப்புள்ளின் பெயர் (1)**

1. கேகயப் புள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கேகயப்புள்ளின் பெயர்
இதனோடு, 'இசையறி பறவை யெனவிசைத் தனரே'
என ஓரடி சில பிரதிகளில் காணப்படுகிறது. (134)

### 545. குயிலின் பெயர்

கோகிலம், களகண்டம், குயிலின் பெயரே

**குயிலின் பெயர் (2)**

1. கோகிலம், 2. களகண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. காளகண்டம்.

கோகிலங் களகண்டம் பிகங்குயி லாகும்-அச்சுப்பிரதி. (135)

## 546. செம்போத்தின் பெயர்

குக்கில், செம் போத்து; சகோரமும் அதற்கே.

**செம்போத்தின் பெயர் (2)**

1. குக்கில், 2. சகோரம்

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாவே

செம்போத்தின் பெயர் : குக்கில் செம்போத்து

சகோரத்தின் பெயர் : சகோர நிலாமுகி.

என வேறு தலைப்புகளில் தனித்தனி நூற்பாகவும் சில பிரதிகளில் தரப்பட்டுள்ளன. (136)

## 547. கோழியின் பெயர்

குக்குடம், சேவல், வாரணம், கோழி

**கோழியின் பெயர் (3)**

1. குக்குடம், 2. சேவல், 3. வாரணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

குக்குடஞ் சேவல் வாரணம் அளகு

சவுண்டது கால்ாயுதம் கம்புள் சம்பங் கோழி

என்று ஒரு பிரதிப் பாடம். (137)

## 548. கூகையின் பெயர்

கூகை, குடிஞை, குராலே, கோட்டான்

**கூகையின் பெயர் (3)**

1. குடிஞை, 2. குரால், 3. கோட்டான்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கோட்டான் பெயர்

'கவுசிகமும் பெரும்புளு மூமனுங் கோட்டான்'-என்றும் பாடவேறுபாடு உண்டு. (138)



## 549. மயிலின் பெயர்

கேகயம், சிகண்டி, சிகியே, மயூரம்,

தோகை, மேகராமம், மஞ்ஞை, பிணிமுகம்,

ஆயின எல்லாம் மயில் என அறைவர்.

**மயிலின் பெயர் (8)**

1. கேகயம். 2. சிகண்டி, 3. சிகி, 4. மயூரம், 5 தோகை, 6. மேகராமம், 7. மஞ்ஞை, 8. பிணிமுகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 மேகாரம், கேதாரம் (139)

## 550. மயிற் பீலியின் பெயர்

தொங்கலும், கலாபமும், இறகும், கூழையும்

இங்குஇவை மயிலின் பீலி என்ப;

தங்கிய ஒருவழிக் கூந்தல் எனத்தகும்.

**மயிற்பீலியின் பெயர் (5)**

1. தொங்கல், 2. கலாபம், 3. இறகு, 4. கூழை, 5. கூந்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை அடுத்து,

மயிற்குரலின் பெயர்: என்னும் தலைப்பில்,

'அகவ லால லம்மயி லின் குரல்'

என ஒரு நூற்பா ஒரு சில பிரதிகளில் மட்டும் காணப்படுகிறது. (140)

## 551. மயிலிறகு முள்ளின் பெயர்

முருந்தே, இறகின் முதல்முள் ஆகும்.

**மயிலிறகு முள்ளின் பெயர் (1)**

1. முருந்து

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இறகினடி முள்ளின் பெயர், இறகினடிக் குரத்தின் பெயர்

3-4 அடிமுள் ஆகும். (141)

## 552. மயிற்சிகையின் பெயர்

அலர்ந்தம், மயூரம் விரிசிகை ஆகும்.

**மயிற்சிகையின் பெயர் (1)**

1. அனந்தம்

பாடவேறுபாடு—விளக்கம்

3. முரிசிகை, முறிசிகை, முறிசிகி

(142)

## 553. காக்கையின் பெயர்

காரி, வாயசம், கொடி, கரும் பிள்ளை
தேரின் நான்குங் காக்கைப் பெயரே

**காக்கையின் பெயர் (4)**

1. காரி, 2. வாயசம், 3. கொடி, 4. கரும்பிள்ளை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:4 யாகும்
'துரோணமு மதன்பெய ராகச் சொல்லுவர்' - என்று ஒரு பிரதியில் இம் மிகை நூற்பா காணப்படுகிறது.

(143)

## 554. வலியான் பெயர்

வயவன், வயானன், வலியான் என்ப.

**வலியான் பெயர் (2)**

1. வயவன், 2. வயானன்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வலியன் பெயர்
வலியன் பாரத்து வாசன் வயவன்-என்பது அச்சுப்பிரதி.(144)

## 555. கரிக்குருவியின் பெயர்

கயவாய், வலியான், கரிக்குரீஇப் பெயரே

**கரிக்குருவியின் பெயர் (2)**

1. கயவாய், 2. வலியான்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கருக்குருவியின் பெயர், கருங்குருவியின் பெயர்
3. கருக்குரீஇ 3-4 கரிக்குருவிப் பெயரே,
கருங்குருவிப் பெயரே; 'கஞ்சனம் வலியன் கயவாய்
கரிக்குரீஇ'-அச்சுப்பிரதி.
வலியா னென்ப கரிக்குரு வியின் பெயர்-என்றும் ஒரு பழம் பிரதிப் பாடம்.

(145)



## 556. கிளியின் பெயர்

வன்னி, தத்தை, சுகமே, சுவாகதம்,
கிள்ளை என்றுஇவை கிளியின் பெயரே.

**கிளியின் பெயர் (5)**

1. வன்னி, 2. தத்தை, 3. சுகம், 4. சுவாகதம், 5. கிள்ளை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-3 சுகம் தத்தை 3. சுகம், சுகமரி
2:1 சுகமரி, 3-4 கிளியென விசைப்பர்
'வன்னிசுகந் தத்தை சுவாகத மரிகிள்ளை
யின்னவை யெல்லாங் கிளியென விசைப்பர்'
என்பது ஒரு பிரதி.
'வன்னி தத்தை சுகமரி சுவாகதங்
கிள்ளை யவந்திகை கீரங் கிளியே'-என்பது
அச்சுப்பிரதி.

(146)

## 557. கருங்கிளியின் பெயர்

கீரம், கிள்ளை, காரிப் பெயரே.

**கருங்கிளியின் பெயர் (2)**

1. கீரம், 2. கிள்ளை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கருங்கிள்ளையின் பெயர்
3-4 காரி கருங்கிளி, கருங்கிளி யாகும்
கீரமரி கிள்ளை கருங்கிளிப் பெயரே-என்றும் ஒரு பிரதி.
இதனையடுத்து,
'சீசந் தூக்கணங் குருவியாகச் செப்புவர்'
என்று ஒருநூற்பா ஒரு சில பிரதிகளில்காணப்படுகிறது(147)

## 558. புறாவின் பெயர்

தூதுணமும், புறவும், பாரா வதமும்
(சீர்சால்) கபோதமும், புறா எனப் படுமே.

**புறாவின் பெயர் (4)**

1. தூதுணம், 2. புறவு 3. பாராவதம், 4. கபோதம்,

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 களரவமும்

தூதுணங் களரவம் பாரா வதத்தொடு-பிற்பதிப்புகள்.

2:3-4 மாடப் புறாவே.

அச்சுப்பிரதியில் பதிப்பாசிரியரால் இதனையடுத்துச் சேர்க்கப் பட்ட இரு புதிய நூற்பாக்கள் வருமாறு:

மாடப்புறவின் பெயர்

3. * காள பதமே மாடப் புறவாம்.

கரும்புறவின் பெயர்

4. * கபோதம் பாராவதங் கரும்புற வாகும். (148)

## 559. பூழ்ப்புள்ளின் பெயர்

இதலே பூழ் ஆம்.

**பூழ்ப்புள்ளின் பெயர் (1)**

இதல்

பாடவேறுபாடு—விளக்கம்

பூழான்

(149)

## 560. கவுதாரியின் பெயர்

சிவல், கவுதாரி.

**கவுதாரியின் பெயர் (1)**

சிவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதலுக்கும் கவுதாரிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 559, 560 நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன.

அச்சுப்பிரதி கவுதாரியின் பெயர் என்னும் தலைப்பில் பின் வருமாறு பாடம் கொண்டுள்ளது :

இதிலே பூழான் சிவல் கவுதாரி.

இதனை அடுத்து, உள்ளான் பெயர் என்னும் தலைப்பில் 'உள்ள லுள்ளான்' எனவும் ஒரு பிரதியில் காணப்படுகிறது. (150)

## 561. அன்றிலின் பெயர்

கிரவுஞ்சம், அன்றில்

**அன்றிலின் பெயர் (1)**

கிரவுஞ்சம்



பாடவேறுபாடு- விளக்கம்

இதனை அடுத்து, 'குறும்பூழ் காடை' எனவும் ஒரு நூற்பா சில பிரதிகளில் உள்ளது. (151)

## 562. ஊர்க்குருவியின் பெயர்

சகடம், ஊர்க்குருவி.

**ஊர்க்குருவியின் பெயர் (1)**

சகடம்.

பாடவேறுபாடு— விளக்கம்

அன்றிலுக்கும் ஊர்க்குருவிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 561, 562ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் கொள்வர் சிலர்.

கடகங் கலவிங்க மூர்க்குருவிப் பெயரே. (152)

## 563. சிவலின் பெயர்

இதலே, பகண்டை, சிவல்ஆகும்மே.

**சிவலின் பெயர் (2)**

1. இதல், 2. பகண்டை.

பாடவேறுபாடு—விளக்கம்

2. பறண்டை

இதனை அடுத்து, பகண்டையின் பெயர் என்னும் தலைப் பில், 'சில்லல பகண்டை யாமெனச் செப்புவர்' என ஒரு நூற்பா அச்சுப்பிரதியில் உள்ளது. இந்நூற்பா பல பிரதிகளில் இல்லை.

'பகண்டை, சிவல், கவுதாரி, இதல், காடை என்பன ஓரினம் போலும். சூடாமணி நிகண்டு முதலியன கவனிக்க' என்பது பேராசிரியர் மு. இராகவையங்கார் குறிப்பு. (153)

## 564. நாகணவாய்ப்புள்ளின் பெயர்

பூவை, சாரிகை, நாகண வாய்ப்புள்.

**நாகணவாய்ப்புள்ளின் பெயர் (2)**

1. பூவை, 2. சாரிகை.

பாடவேறுபாடு—விளக்கம்

1-2 சாரிகை பூவை, 3-4 நாங்கள் வாய்ப்புள், நாகணவாயே. (154)

## 565 காடையின் பெயர்

குறும்பூழ் காடை என்னக் கூறுவர்.

**காடையின் பெயர் (1)**
குறும்பூழ்.

பாடவேறுபாடு—விளக்கம்
2-3 காடையின் பெயரெனக். (155)

## 566. மீன்எறி சிறு பறவையின் பெயர்

சிரலே, மீன்எறி சிறுபறவை ஆகும்.

**மீன்எறி சிறு பறவையின் பெயர் (1)**
சிரல்.

பாடவேறுபாடு—விளக்கம்

சிரலே சிச்சிலி மீனெறி சிறுபறவை—அச்சுப்பிரதி.

சில்லை சிரலே தித்தரி சிச்சிலி—என்பது ஒரு பிரதி.
பின்வரும் வேறுபாடுகளுடனும் சில பிரதிகள் உள :
சிச்சிலியின் பெயர் :

சிரலே மீனெறி சிறுபறவை சிச்சிலி.

சிரலின் பெயர் :
மீனெறி சிச்சிலி சிறுபறவை சிரலே. (156)

## 567. பறவைப் பொதுப் பெயர்

புள்ளு, போகில், சகுனம், பிணிமுகம்,
ஒள்ளிய பறவைக்கு எல்லாம் பொதுப்பெயர்;
பதங்கமும், ககமும், விகங்கமும் ஆகும்.

**பறவைப் பொதுப் பெயர் (6)**
1. புள், 2. போகில், 3. சகுனம், 4. பிணிமுகம், 5. பதங்கம், 6. ககம்.

பாடவேறுபாடு—விளக்கம்
1:3 சவுனம்
3:3 விதங்கமும் (157)

## 568. அன்னத்தின் பெயர்

ஓதிமம், அஞ்சம், எகினம், அன்னம்;
(நீதியின்) உன்னமும் அவ்இனப் பெயரே.



**அன்னத்தின் பெயர் (4)**
1. ஓதிமம், 2. அஞ்சம், 3. எகினம், 4. உன்னம்.

பாடவேறுபாடு—விளக்கம்
2:2 முன்ன, முன்னமு. (158)

## 569. அன்னத்திறகின் பெயர்

தூவி, அன்னத்து இறகுஎனச் சொல்லுவர்.

**அன்னத்திறகின் பெயர் (1)**
தூவி.

பாடவேறுபாடு—விளக்கம்
2-4 யன்னச் சிறகெனச் செப்புவர்
தூவி யன்னத்தின் முடியு மாகும்—என்பது
சில பிரதிகளில் அதிகம் உள்ளது. (159)

## 570. சக்கரவாகப்புள்ளின் பெயர்

நேமிப் புள்ளு, சகோரம் என்று இவை
ஆகும் சக்கர வாகப் புள்ளே.

**சக்கரவாகப்புள்ளின் பெயர் (2)**
1. நேமிப்புள், 2. சகோரம்.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : சக்கரவாகப் பெயர்.
1:1-3 நேமிப் புள்ளுச் சகோரமும்
2:2-4 சக்கர வாளப் பெயரே. (160)

## 571. பெருங்குருகின் பெயர்

யானையுண் குருகு, பெருங்குருகு ஆகும்.

**பெருங்குருகின் பெயர் (1)**
யானையுண் குருகு. (161)

## 572. குருகினத்தின் பெயர்

குருகினம், வண்டானம்.

**குருகினத்தின் பெயர் (1)**
வண்டானம்.

பாடவேறுபாடு—விளக்கம்

குருகினம் வண்டான மாகக் கூறுவர்.

குடுகுவண் டானங் கொய்யடி நாரை—என்பது அச்சுப்பிரதி. (162)

## 573. பெருநாரையின் பெயர்

பெருநாரை போதா.

**பெருநாரையின் பெயர் (1)**

போதா.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நாரையின் பெயர்

புதாவு பெருநாரை போதா வாகும்.

பெருநாரை போதா பிதாவு மாகும்—அச்சுப்பிரதி.

இதனைத் தொடர்ந்து முதற்பதிப்பாசிரியர் பாடிச் சேர்த்த இருநூற்பாக்கள் வருமாறு :

வெண்ணாரையின் பெயர்

5. *வெண்ணாரை சாரசம்

கருநாரையின் பெயர்

6. *கருநாரை சிகரி. (163)

## 574. சகோரத்தின் பெயர்

சகோரம் பேராந்தை தனக்குப் பெயரே.

**சகோரத்தின் பெயர் (1)**

1. பேராந்தை

பாடவேறுபாடு—விளக்கம்

சகோரம் பேராந்தை தண்ணிலா முகியே-என்பது அச்சுப் பிரதி. தண்ணிலா முக்கி என்பது பாட வேறுபாடு.

'பொற்கண் ணிருடி கூன்பில்லை பின்னறி

சகோரம் பேராந்தை தனக்குப் பெயரே' என்பது ஒரு பிரதி (164)

## 575. நீர்க்காக்கையின் பெயர்

சாரண்டம், நீர்க்காக்கை,

**நீர்க்காக்கையின் பெயர் (1)**

1. சாரண்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1. சரண்டம் (165)



## 576. சம்பங்கோழியின் பெயர்

கம்புள், சம்பங்கோழி

**சம்பங்கோழியின் பெயர் (1)**

1. சம்புள்

பாடவேறுபாடு—விளக்கம்

நீர்க்காக்கைக்கும் சம்பங்கோழிக்கும் பெயர் என்னும் தலைப்பில் 575, 576ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பா வாகவும் சிலர் கருதுவர். (166)

## 577. கொக்கின் பெயர்

குரண்டமும், பகமும், கொக்கின் பெயரே.

**கொக்கின் பெயர் (2)**

1. குரண்டம், 2. பகம், (167)

## 578. வண்டின் பெயர்

அளியே, கேசரம், அறுபதம், கழுதொடு,

வரியே, சுரும்பு, கீதம், சூதம்,

அரி, மா, பிரமரம், ஆர்பதம், வரிக்கடை,

பிரசம், தும்பி, மதுகரம், ஞிமிறு,

மருவிய தேனீ, வண்டெனப் படுமே.

**வண்டின் பெயர் (18)**

1. அளி, 2. கேசரம், 3. அறுபதம், 4. கழுது, 5. வரி, 6. சுரும்பு, 7. கீதம், 8. சூதம், 9. அரி, 10. மா, 11. பிரமரம், 12. ஆர்பதம், 13. வரிக்கடை, 14. பிரசம், 15. தும்பி, 16. மதுகரம், 17. ஞிமிறு, 18. தேனீ.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3 கீதன்

3:3-4 அராபதம் வரைக்கடை

4:4 மிஞிறு

5:1 விரவிய (168)

## 579. ஆண்வண்டின் பெயர்

சுரும்பு அவற்று ஆண்எனச் சொல்லவும் படுமே;

மதுகரம், தும்பி, ஆகவும் வைப்பர்.

**ஆண்வண்டின் பெயர் (3)**

1. சுரும்பு, 2. மதுகரம், 3. தும்பி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 சொல்லுவர் புலவர்
2:3-4 ஆமென் றறைவர்
2 இவ்வடியைத் தும்பியின் பெயர் எனத் தலைப்பிட்டுத் தனி நூற்பாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன. (169)

## 580. இந்திரகோபத்தின் பெயர்

ஈயல், மூதாய். இந்திர கோபம்.

**இந்திரகோபத்தின் பெயர் (2)**

1. ஈயல், 2. மூதாய்

பாடவேறுபாடு—விளக்கம்

2 மூதாயே
2-3 மூதா கோபம், மூதா விந்திர
2-4 மூதாய் கோபம் இந்திரகோபம் (170)

## 581. விட்டிற் பறவையின் பெயர்

பதங்கமும், சலபமும், விட்டிற் பறவை.

**விட்டிற் பறவையின் பெயர் (2)**

1. பதங்கம், 2. சலபம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : விட்டிலின் பெயர்
3-4 விட்டிலின் பெயரே
இதனை அடுத்து,
'பதங்கம் விட்டிலொடு பறவைப் பொதுப்பெயர்'
எனஒரு நூற்பா சில பிரதிகளில் உள்ளது. இதற்கு ஒருசார் பறவைப் பொதுப் பெயர் என்றும், பதங்க மென்பதின் பெயர் என்றும் தலைப்புத் தந்துள்ளனர். பறவைப் பொதுப் பெயருள் ளும் இப்பொருள் கூறப்பட்டிருப்பதால் இது கூறியது கூறலாம். இஃது ஆசிரியர் வாக்கன்று. அச்சுப் பிரதிகளிலும் இஃது இல்லை. (171)

## 582. சிள்வீட்டின் பெயர்

சிதடி, நெடி, சில்லி, சிள்வீடு ஆகும்.

**சிள்வீட்டின் பெயர் (3)**

1. சிதடி, 2. நெடி, 3. சில்லி.



பாடவேறுபாடு—விளக்கம்

1-2 சிதடியுஞ் சில்லியுஞ் 2. சில்லிகை
1-4 சிதடியு நெடியுஞ் சில்லியுஞ் சிள்வீடு (172)

## 583. நுளம்பின் பெயர்

அளுலமும், சலவலும், நொள்ளலும், நுளம்பே.

**நுளம்பின் பெயர் (3)**

1. அளுலம், 2. சலவல், 3. நொள்ளல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2, சலபமும், ஞலவலும்,
1-3 அஞல முஞல்வலு துள்ளல் (173)

## 584. கொதுகின் பெயர்

மசகம், கொதுகு என அறையல் வேண்டும்.

**கொதுகின் பெயர் (1)**

1. மசகம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கொசுகின் பெயர்
2-3 கொசுகென் றறையில்
2-4 கொசுகென வகுத்தனர் புலவர் (174)

## 585. துருஞ்சிலின் பெயர்

துருஞ்சில், ஆலாலம்.

**துருஞ்சிலின் பெயர் (1)**

1. ஆலாலம் (175)

## 586. வாவலின் பெயர்

அஞ்சலிகை, வாவல்

**வாவலின் பெயர் (1)**

1. அஞ்சலிகை

பாடவேறுபாடு—விளக்கம்

585-586 ஆம் நூற்பாக்களைத் துருஞ்சிலின் பெயர். வாவலின் பெயர் என்னும் தலைப்பில் ஒரே நூற்பாவாகவும்

கொள்வர். அதனையே வாவலின் பெயர் என்னும்தலைப்பில், 'துரிஞ்சி லாலாலமஞ்சலிகை வாவல்' என்றும் ஒரு சில பிரதிகள் கொண்டுள்ளன. பலபிரதிகளில் இவை இல்லை.(176)

## 587. சேவல் என்னும் பெயர்

மயில் ஒழித்து எல்லாப் பறவை ஆண்பெயர்
பயிலும் சேவல் எனும் மொழிப் பால.

**சேவல் என்னும் பெயர் (1)**
மயில் ஒழித்து மற்றப் பறவையின்ஆணிற்கு உரியது.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : பறவையாண் பொதுப்பெயர் (177)

## 588. மயில் எழால் ஆணுக்கு வரும்பெயர்

மயிலே எழாலொடு போத்து எனப் படுமே.

**மயில் எழால் ஆணுக்கு வரும்பெயர் (1)**
1. போத்து.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : போத்து என்னும் பெயர்
3-4 போத்தே வருமே (178)

## 589. பெண்பறவையின் பெயர்

பெட்டையும், பேடையும், புள்ளின் பெண் பெயர்.

**பெண்பறவையின் பெயர் (2)**
1. பெட்டை, பேடை.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : புள்ளின் பெண் பெயர்,
புள்ளின் பெண்ணுக்கு வரும் பெயர்.
பேடை பெட்டை புள்ளினப் பெண்பெயர்
பெட்டை பெடை பேடை புள்ளின் பெண்பெயர்-அச்சுப் பிரதி. (179)

## 590. கோழி கூகைப் பெண்பெயர்

கோழி, கூகை பெண்மைப் பெயரே
ஆயுங் காலை, அளகுஎன அறைவர்.



**கோழி கூகைப் பெண் பெயர் (1)**
1. அளகு

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : கோழி கூகைப் பெண்ணுக்கு வரும் பெயர்
அளகு என்னும் பெயர்
1:3-4 பெண்பெய ரல்லன
2:4 வறையார்
3 'அப்பெயர்க் கிழமை மயிற்கு மாகும்'-எனவும் ஓரடி மிகையாகச் சில பிரதிகளில் காணப்படுகின்றது. (180)

## 591. இளம்பறவையின் பெயர்

பார்ப்பும், பிள்ளையும், பறப்பவற்று இளமை.

**இளம்பறவையின் பெயர் (2)**
1. பார்ப்பு, 2. பிள்ளை.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : பறவையிளமையின் பெயர்,
பார்ப்பு பிள்ளை எனும் பெயர். (181)

## 582. முட்டையின் பெயர்

அண்டமும், சினையும், அவற்றின் முட்டை.

**முட்டையின் பெயர் (2)**
1. அண்டம், 2. சினை.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு : பறவை முட்டையின் பெயர்.
1-2 அண்டங் குடம்பைசினை. (182)

## 593. பறவை வாயலகின் பெயர்

துண்டமும், மூக்கும், வாயலகு ஆகும்.

**பறவை வாயலகின் பெயர் (2)**
1. துண்டம், 2. மூக்கு.

பாடவேறுபாடு—விளக்கம்
தலைப்பு: பறவையலகின் பெயர், பறவை மூக்கின் பெயர்
2-4 மூக்குவா யலகெனச் சொல்லும். (183)

### 594. இறகின் பெயர்

பறையும், தூவியும், சிறையும், பிச்சமும்;
இறகின் பெயரே குரல், கூழை என்று இவை
அருகி ஒருவழி ஆகுஇடன் உடைத்தே.

**இறகின் பெயர் (6)**

1. பறை, 2 தூவி, 3 சிறை, 4. பிச்சம்; 5. குரல். 6. கூழை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 பெயர் 3. குரலே
3:3-4 யாகிட்டனுடைய, யாகலு முரித்தே,
யாதலு முரித்தே. (184)

### 595. புள்ளொலிக் கூட்டத்தின் பெயர்

தொழுதி, புள்ளொலிக் கூட்டம் ஆகும்.

**புள்ளொலிக்கூட்டத்தின் பெயர் (1)**

1. தொழுதி,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பறவைக் கூட்டத்தின் பெயர், புள்ளொலியின் பெயர்.

1. தொகுதி, துழனி, 3-4 கூட்டமெனச் சொல்லும்.
துழனி, புள்ளொலிக் கூட்டமாகும்-அச்சுப்பிரதி.
இது முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா:
புள்ளீட்டத்தின் பெயர்
7. *தொழுதிபுள்ளீட்டம். (185)

### 596. முதலையின் பெயர்

கிஞ்சு மாரமும்; இடங்கரும், கராமும்,
இங்கு இவை வன்மீன், முதலை ஆகும்.

**முதலையின் பெயர் (1)**

1. கிஞ்சு மாரம், 2. இடங்கர், 3. கராம், 4. வன்மீன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 முசலியும் வன்மீனும்-பிற்பதிப்புகள். (186)



### 597. ஆண்முதலையின் பெயர்

கராம், அலற்று ஆண் எனக் கருதல் வேண்டும்.

**ஆண்முதலையின் பெயர் (1)**

1. கராம். (187)

### 598. சுறாமீனின் பெயர்

மகரம், சுறாமீன் ஆகும் என்ப.

**சுறாமீனின் பெயர் (1)**

1. மகரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: மகரமீனின் பெயர்.
3-4 னாக வைப்பர். (188)

### 599. இறால் மீனின் பெயர்

இறவே இறால்மீன்.

**இறால் மீனின் பெயர் (1)**

1. இறவு. (189)

### 600 கெளிற்றுமீனின் பெயர்

கெளிறு, கெளிற்று மீன்.

**கெளிற்றுமீனின் பெயர் (1)**

1. கெளிறு

பாடவேறுபாடு—விளக்கம்

1. கெடிறு
599-600ஆம் நூற்பாக்களை இறால் மீனுக்கும் கெளிற்று மீனுக்கும் பெயர் என்னும் தலைப்பில் ஒரே நூற்பாவாகவும் கொள்வர். (190)

### 601. மீன் பொதுப்பெயர்

மீனமும், மச்சமும், மயிலையும், மீன் பெயர்.

**மீன் பொதுப் பெயர் (3)**

1. மீனம், 2. மச்சம், 3. மயிலை.

**பாடவேறுபாடு - விளக்கம்**

மயிலை மீன மச்சமீன் பொதுப் பெயர்- அச்சுப்பிரதி.

இதன்பின் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பா:
பெருமீனின் பெயர்

8. *யானை மீன்திமி பெருமீனாகும். (191)

### 602. திமிங்கிலம் என்னும் பெயர்

யானையை விழுங்கும் மீன் திமிங்கிலம் என்ப.

**திமிங்கிலம் என்னும் பெயர்**
யானையை விழுங்கும் மீன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: யானையை விழுங்கு மீனின் பெயர், யானை மீனை விழுங்கு மீனின் பெயர். (192)

### 603. திமிங்கில கிலம் என்னும் பெயர்

அம்மீனை விழுங்கும்மீன் திமிங்கில கிலமே.

**திமிங்கில கிலம் என்னும் பெயர்**
திமிங்கிலத்தை விழுங்கும் மீன்.

பாடவேறுப்பாடு—விளக்கம்

தலைப்பு: திமிங்கிலத்தை விழுங்கும் மீனின் பெயர்.
602, 603ஆம் நூற்பாக்களை திமிங்கிலத்துக்கும் திமிங்கிலகிலத்துக்கும் பெயர் என்னும் தலைப்பில் ஈரடி கொண்ட ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (193)

### 604. பெருமீனின் பெயர்

ஆனையின் பனைமீன் அனையவும் பெருமீன்.

**பெருமீனின் பெயர் (2)**
1. ஆனைமீன், 2. பனைமீன்.

பாடவேறுபாடு—விளக்கம்

ஆனை மீன்திமி பெருமீனாகும். (194(

### 605. மலங்கின் பெயர்

ஏனை மலங்கு, நூறை என்று ஆகும்.

**மலங்கின் பெயர் (1)**
1. நூறை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சிறுமீனின் பெயர், நூறையின் பெயர் (195)



### 606. சங்கின் பெயர்

நந்து, பணிலம், வளை, நாகு, சுரிமுகம்,
கம்பு, கோடு, சங்கு எனப்படுமே.

**சங்கின் பெயர் (7)**
1. நந்து, 2. பணிலம், 3. வளை, 4. நாகு, 5. சுரிமுகம், 6. கம்பு, 7. கோடு,

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 கம்பு கோடு வாரணம்
2 சம்பு கோடு வாரணம் சங்கே (196)

### 607. வலம்புரிச் சங்கு

சங்கில் சிறந்தது, (சாதி) வலம்புரி.

**வலம்புரிச் சங்கு**

சங்கில் சிறந்தது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு
வலம்புரியின் பெயர், வலம்புரி யென்னும் பெயர்
சிறந்த சங்கின் பெயர்
இதனோடு இரண்டாம் அடியாய்,
பொங்கிய கொக்கரை யென்றும் புகல்வர்- அச்சுப்பிரதி.
வலம்புரிச் சங்கின் பெயர் என்று இவ்வாறு உள்ளதாயினும் வலம்புரி முதலியவற்றின் பரியாயப் பெயரன்றி இயல்பே கூறப்படுதலால் 'பெயர்' என்பது தலைப்பில் விடப்பட்டது. (197)

### 608. சலஞ்சலச் சங்கு

அங்கதின் சிறந்தது சலஞ்சலம் ஆகும்.

**சலஞ்சலச் சங்கு**

வலம்புரியினும் சிறந்த சங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: வலம்புரியிற் சிறந்த சங்கின் பெயர். (198)
4 என்ப

## 609. பாஞ்ச சன்னியம்

அதனினும் சிறந்தது அரி பாஞ்ச சன்னியம்.

**பாஞ்ச சன்னியம்**

சலஞ்சலத்தினும் சிறந்தது.

பாடவேறுபாடு—விளக்கம்

திருமால் திருக்கரத்தில் விளங்குவது.
தலைப்பு : சலஞ்சலத்திற் சிறந்த சங்கின் பெயர்.
1 அதிலும் 3-4 பாஞ்ச சன்னியம் (199)

## 610. நத்தையின் பெயர்

கருநந்து, நாகு, சுரிமுகம், கூன், நத்தை.

**நத்தையின் பெயர் (4)**

1. கருநந்து, 2. நாகு, 3. சுரிமுகம், 4. கூன். (200)

## 611. ஏரலின் பெயர்

இறலும், எருந்தும், ஏரல் ஆகும்,

**ஏரலின் பெயர் (2)**

1. இறல், 2. எருந்து,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சிப்பியின் பெயர், கிளிஞ்சிலின் பெயர்.
இறலெருந் தேரல் கிளிஞ்சி லென்ப-என்பது அச்சுப்பிரதி.
இதன் பின்னர் முதற் பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பாக்கள்.

**சிப்பியின் பெயர் :**

9. *இப்பி சுத்தி சிப்பி யாகும்
பல்லியின் பெயர் :
10. * புள்ளி கௌளி கோகிலம் பல்லி. (201)

## 612. தவளையின் பெயர்

அரி, மரை, நீகம், தேரை, மண் டூகம்,
வருபவை, ஐந்தும் தவளைப் பெயரே.



**தவளையின் பெயர் (5)**

1. அரி, 2. மரை, 3. நீகம், 4. தேரை,
5. மண்டூகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 தவளையென வைப்பர். (202)

## 613. ஆமையின் பெயர்

கச்சபம், கூர்மம், கமடம், ஆமை.

**ஆமையின் பெயர் (4)**

1. கச்சபம், 2. கூர்மம், 3. கமடம், 4. கடிப்பாமை.
இதன் பின்னர் முதற்பதிப்பாசிரியர் சேர்த்த புது நூற்பாக்கள் :
பெண்ணாமையின் பெயர் :
11. ★ துளிபெண் ஆமை
அட்டையின் பெயர் :
12. ★ சளுக மட்டை.

பாடவேறுபாடு—விளக்கம்

தஞ்சைச் சரஸ்வதி மகாலில் உள்ள ஓர் ஏட்டில் 'செளுக மட்டை' என்பது காணப்பெற்றது. எனவே இது முதற் பதிப்பைப்பார்த்து ஏட்டில் எழுதி வைக்கப்பெற்ற பிரதி யாதல் வேண்டும். (203)

## 614. நண்டின் பெயர்

களவன், நள்ளி, குளிரம், ஞெண்டு, ஆர்மதி,
கர்க்கடகம், அலவன், கவைத்தாள், நண்டே,

**நண்டின் பெயர் (8)**

1. களவன், 2. நள்ளி, 3. குளிரம், 4, ஞெண்டு, 5. ஆர்மதி, 6. கர்க்கடகம், 7. அலவன், 8. கவைத்தாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 கள்வன், 3. குளிர்ஞெண், 4. டாமதி, டரைமதி,
2:1 கற்கடகம் 3-4 நண்டின் பெயரே
அலவ னள்ளி குளிர்ஞெண் டார்மதி
கள்வ னென்றிவை கர்க்கடகப் பெயரே—என்பது அச்சுப் பிரதி. தெய்வப் பெயர்த் தொகுதியில் கர்க்கடக ராசியின் பெயராகவும் இந்நூற்பாவே (71) அமைந்துள்ளது பிற்பதிப்புக்களும் முதற்பதிப்பைப் பின்பற்றியுள்ளன. (204)

## 615. நண்டினாணின் பெயர்

அலவன், ஆண் என்று அறைதற்கும் உரித்தே.

**நண்டினாணின் பெயர் (1)**

அலவன்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆணண்டின் பெயர்
3-4 றறையல் வேண்டும்

'அலவனாண் ஞெண்டே' என்றும் ஒரு பிரதியில் உள்ளது. (205)

## 616. உளுவின் பெயர்

உளு, உசு ஆகும்.

**உளுவின் பெயர் (1)**

உசு

பாடவேறுபாடு—விளக்கம்

'உளுவு முசுவு மொசன்றெனப் படுமே' என்றும் ஒரு பிரதி.
உளுசுவாவே, உளுவுசுவாவே எனப் பிற்பதிப்புக்களில்
இந்நூற்பா தரப்பட்டுள்ளது. (206)

## 617. எறும்பின் பெயர்

உறவி, எறும்பே.

**எறும்பின் பெயர் (1)**

உறவி

பாடவேறுபாடு—விளக்கம்

உறவி பிபீலி யெறும்பென வோதுவர் என்று ஒரு பிரதி.
உளுவுக்கும் எறும்புக்கும் பெயர் என்னும் தலைப்பில் 616, 617ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர். (207)

## 618. தேளின் பெயர்

தெறுக்கால், விருச்சிகம், தேள் என்று ஆகும்.

**தேளின் பெயர் (2)**

தெறுக்கால், விருச்சிகம்.



பாடவேறுபாடு—விளக்கம்

தெறுக்கால் விருச்சிகந் தேளென் றாகும்
நலமென் பெயருந் தேளின் மேற்றே—என்று சில பிரதிகள்.

தெறுக்கால் பறப்பன் றேளே விருச்சிக
மலமென் பெயருந் தேளின் மேற்றே—அச்சுப்பிரதி. (208)

## 619. சிலந்தியின் பெயர்

சிலம்பியும், உலூதையும் சிலந்தி என்று ஆகும்.

**சிலந்தியின் பெயர் (2)**

1. சிலம்பி, 2. உலூதை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 உலூதியும், 3-4 சிலந்தி யாகும்.
இதன்பின்,
'பனைச்சொல் கெவுளி மற்றிவை பல்லி'
என ஓர் ஏட்டில் பல்லியின் பெயராக இந்நூற்பா காணப்படுகிறது. பல்லியின் பெயராக முதற் பதிப்பாசிரியர் ஆக்கிய நூற்பாவை 611ஆம் நூற்பாவின் குறிப்பில் காண்க. (209)

## 620. நாகர வண்டின் பெயர்

நாகர வண்டின் நாமம், நொள்ளை.

**நாகர வண்டின் பெயர் (1)**

1. நொள்ளை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நாகர வட்டையின் பெயர்.
1-2 நாகர வட்டையி 4. நொள்ளே. (210)

## 621. ஆழலின் பெயர்

சிதலை, ஆழல்.

**ஆழலின் பெயர் (1)**

1. சிதலை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சிதலின் பெயர்
1. சிதலே (211)

### 622. கறையான் பெயர்

செல்லே, கறையான்.

**கறையான் பெயர் (1)**
1. செல்

பாடவேறுபாடு—விளக்கம்

'கறையான் செல்லே' என்றும் பாடம்.
கறையான் பெயர் என்னும் தலைப்பில்,
சிதலை யாழல் செல்லே கறையான் என 621, 622ஆம் நூற்பாக்களை ஒன்றாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன. (212)

### 623. புழுவின் பெயர்

கிருமியும், கீடமும், புழுவின் பெயரே

**புழுவின் பெயர் (2)**
1. கிருமி, 2. கீடம். (213)

### 624. கோற்புழுவின் பெயர்

கோற்புழு, உலண்டும், கீடமும் ஆகும்.

**கோற்புழுவின் பெயர் (2)**
1. உலண்டு, 2. கீடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனை இறுதி நூற்பாவாகவும் சில பிரதிகள் கொண்டுள்ளன. அச்சுப்பிரதியும் இறுதி நூற்பாகவே அமைத்துள்ளது. புழுவின் பெயரைச்சார இஃது இங்கு இருப்பதே பொருத்தமாகும். (214)

### 625. கோற்றேனின் பெயர்

கோற்றேன், பிரசம்.

**கோற்றேனின் பெயர் (1)**
1. பிரசம். (215)

### 626. தேன் கூட்டின் பெயர்

இறால், தேன் கூடே.



**தேன் கூட்டின் பெயர் (1)**
1. இறால்

பாடவேறுபாடு—விளக்கம்

கோற்றேனின் பெயர் தேன்கூட்டின் பெயர் என்னும் தலைப்பில் 625-626 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகவும் சிலர் கொள்வர்.

இதன்பின் தேனீப் பெயர் என்னும் தலைப்பில்,
'பிரசந் தேன்கட் டேனீப் பெயரே'.
என்று ஒரு நூற்பா சில பிரதிகளில் உள்ளது. (216)

### 627. திவாகர வரலாறு

காதல் ஈகையில் போதிப் பெருந்தவன்,
தெவ்அடு கால வைவேல் எழினி,
அவ்வை பாடிய அம்பர் கிழவன்,
தேன்தார்ச் சேந்தன் தெரிசொல் திவாகரத்து
மூன்றாவது விலங்கின் பெயர்த்தொகுதி முற்றும்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 போதியிற் பெருந்தலைவன்
2:4 எழுனி
3:3 அம்பற்
4:3 தெரித்தசொல், தெரிந்தசொல். (217)

# திவாகரம்

முதல் தொகுதி

பதிப்பாசிரியர்
மு. சண்முகம் பிள்ளை
இ. சுந்தரமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகம்
1990